சென்னை வியாபாரி
என்கிற
தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | பிரமாதீசஸ்ரு அற்பிசிமீ 7உ— 1913ஸ்ரு அக்டோபர்மீ 23உ | ஸஞ்சிகை 6. No. 6.

"சென்னை வியாபாரி."

(மாதப் பிரசுரம்.)

"சென்னை வியாபாரிக்கு கடிதம் எழுதுகிறவர்களும் மணிஆர்டர் அனுப்புகிறவர்களும் சென்னபட்டணம் நார்த்பீச் இந்தியன் சேம்பர் பில்டிங்கிலிருக்கும் மானேஜருக்கு எழுதவேண்டும்.

விளம்பரங்கள் பயிரங்கப்படுத்துவதற்காக பிளாக்குகளும் அது சம்பந்தமான கடிதங்களும் மானேஜருக்கே அனுப்பப்படவேண்டும்.

விளம்பரவிகிதம்:—முழுப்பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூ 5; பாதி பக்கத்திற்கு ரூ 3; கால் பக்கத்திற்கு ரூ 2-0-0. ஒப்பந்த விகிதங்களுக்கு பிரத்தியேகமாக எழுதிக் கொள்ளலாம்.

சென்னை வியாபாரியின் சந்தாவிபரம்.

இந்தியா—சிலோன் பர்மாமுதலிய உள்நாட்டு தபால்சார்ஜ் உள்பட	ரூ.	5	0	0
சிங்கப்பூர் பினங் ,,	ரூ.	7	8	0
தனிப்பிரதி 1க்கு ,,	ரூ.	0	8	0

வியாபார சம்பந்தமாகவும் கைத்தொழில்சம்பந்தமாகவுமுள்ள வியாசங்கள் அங்கீகரிக்கப்பட்டால், வியாசம் எழுதியவர்கள் வெகுமானிக்கப்படுவார்கள்.

Southern India Chamber of Commerce.

தென்னிந்தியா வர்த்தக ஆலோசனை சபை.

பிரெஸிடெண்ட்.

ரூவ்பகதூர் பி. தியாகராய செட்டி பி. ஏ.

வைஸ் பிரசிடெண்கேள்.

1. கான்பகதூர் M. A. கூலேஸ்பாட்சா சாகேப்.

2. திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ்.

கௌரவ காரியதரிசிகள்.

1. மிஸ்டர் P. N. முத்துசாமி நாயுடு பி. ஏ.

2. மிஸ்டர் மவுலானா அப்துல் சுப்ஹான் சாகேப்.

பிரசிடெண்டையும் வைஸ் பிரசிடெண்டுகளையும் தவிர கமிட்டியில் 24 மெம்பர்களிருக்கிறார்கள். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மீட்டிங்கு நடத்தப்படுகிறது.

சந்தா.—வருஷத்திற்கு ரூ 24; உள்ளூரில் வசிப்பவர்கள் ½ வருஷத்திற்கு ஒரு வாய்தாவாக முன்பணமாகச் செலுத்தவேண்டும். வெளியூர் மெம்பர்களுக்கு ரூ. 10 இருவகையாருக்கும் பிரவேசக்கட்டணம் ரூ 12.

இந்த வர்த்தக ஆலோசனைசபை கம்பெனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

Trade Marks என்கிற வியாபார சாமான் அடையாளம், ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமானால் மெம்பராக இருப்பவர்களுக்கு ரூ. 3ம். மெம்பராயில்லாதவர்களுக்கு ரூ. 8ம் ஏற்பட்டிருக்கிறது. வர்த்தக அடையாளங்கள் அடங்கிய ரிஜிஸ்டரை பார்க்க விரும்புகிறவர்கள் ரூபாய் ஒன்று செலுத்த வேண்டும்.

பார்வையிடுவதும் பஞ்சாயத்தும்:—தகராருக்குட்பட்ட சமான்களைப் பார்வையிட்டு மத்தியஸ்தம் செய்யவும் சேம்பர் உடன்படுகிறது.

ஆபீஸ்:— சென்னை நார்த்பீச் இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ்.

The Mysore Dasara Exhibition.
மைசூர் தசரா பொருட்காக்ஷி.

7 வது வருடத்திய மைசூர் தசரா விவசாய கைத்தொழில் பொருட்காக்ஷி நாளது மாதம் சென்ற 3ம் உ சுக்கிரவாரதினம் மைசூரில் திறக்கப்பட்டது. திவான் மிஸ்டர் விஸ்வேஸ்வரய்யா விஜயம்செய்திருந்தார். இப்பொருட்காக்ஷி மேன்மைதங்கிய மகாராஜா அவர்களுடைய உத்திரவின் பேரிலும் ஆதரிப்பின் பேரிலும் 1907ல் ஆரம்பிக்கப்பட்டது. அது முதல் எல்லோருடைய கவனத்தைப் பற்றும்படியாக வருஷத்திற்கு வருஷம் விருத்தி அடைந்து சர்க்காருடைய முயற்சியிலிருந்து வருகின்றது. இந்தப் பொருட்காக்ஷிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து நடத்திவர மேன்மை தங்கிய மகாராஜா அவர்களின் கவர்ன்மெண்டு எப்போதும் தாராளமான இருதயத்துடன் தயாராயிருந்து வருகின்றது. பொருட்காக்ஷி கமிட்டி மிஸ்டர் குரும்பிகலே பிரசிடெண்டாக அமைத்துக் கொண்டிருப்பது சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் பெருமையைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. சென்ற 17உ வரையில் பொருட்காக்ஷி திறந்துவைக்கப்பட்டிருந்தது:

——:(*):——

COCHIN STATE EXHIBITION.
கோச்சி சமஸ்தான பொருட்காக்ஷி.

மேன்மை தங்கிய கொச்சி சமஸ்தான கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டு வரும் 5வது வருடத்திய விவசாய கைத்தொழில் பொருட்காக்ஷி மேன்மை தங்கிய அரசர் அவர்களால் சென்ற செப்டம்பர்மாதம் 29உ திறக்கப்பட்டது. விஜயம் செய்திருந்தவர்கள் :— சர் பிரடரிக் நிக்கல்சனும், அவருடைய துரைசாணியும், விவசாய இலாக்கா டைரக்டராகிய மிஸ்டர் சாட்விக் பிரிடிஷ் ரெசிடெண்ட் மிஸ்டர் போப்ஸ். காக்ஷிதிறக்கப்படும்சமயத்தில் திவான்மிகப் பொருளடங்கிய நீண்டபிரசங்கம் செய்தனர். விவசாயத்தைப்பற்றியே பெரும்பாலும் பிரசங்கம்செய்தனர். ஜனங்கள் விரும்பும்படியாக லாபகரமான விவசாயம் செய்யும் விதத்தைக் கண்டுபிடித்து விருத்தி செய்து கொண்டு போகவேண்டுமென்பதைப்பற்றி வெகுவாய்ப்பேசினார். கொச்சி சமஸ்தானத்தின் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் பற்றிப்பேசி சமஸ்தானத்தின் பச்சைப் பொருள்கள் வருடத்திற்கு வருடம் மிகவும் விசாலித்துப் பரவி வருகிறதென்றும் ஆகவே வெளிநாட்டு ஏற்றுமதியும் கடல்கரையோர ஏற்றுமதியும் கடந்த 5 வருட காலத்திற்குள் 219 லிருந்து 266 லக்ஷ ரூபாய்க்கு ஏறியிருக்கிறதென்றும்: வெளி நாட்டு வியாபாரம் மட்டிலும் 107 லிருந்து 255லக்ஷத்திற்கு ஏறியிருக்கிறதென்றும் சொன்னார். இப்போதே இப்படியிருக்குமாகில் உத்தேசம் செய்யப் பட்டிருக்கும் துறைமுகம் கட்டி முடிக்கப்பட்டால் வியாபாரத்தின் விருத்திக்கு ஒரு எல்லையு முண்டோ என்று சொன்னார். உள் நாட்டு மூலதனத்துடன் அநேக கம்பெனிகள் ஸ்தாபிக்கப் பட்டிருப்பது சமஸ்தானத்தின் முற்போக்கான நிலைமையை காட்டுகிறதென்று சொல்லி சந்தோஷப்பட்டனர். இது மட்டிலுமா? வியாபாரத்திற்காகவும் சாமான் போக்கு வரத்திற்காகவும் அநேக கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. சமஸ்த்தானத்திலிருந்த தொழிற் சாலைகள் அதிகரித்திருக்கின்றன. மூலதனத்திற்குக் குறைவில்லை. ஐக்கிய நாணய சங்கங்கள் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்படப் போகின்றன. சமஸ்தானத்தின் மத்தியில் ஒரு சர்க்கார் பாங்கும் ஸ்தாபிக்க உத்தேசம் செய்யப்பட்டிருக்கிறது. சர்க்கார் உதவியின்பேரில் ஒரு மாணாக்கர் இங்கிலாண்டு தேசத்தில் தோல்தொழில்கற்றுக் கொண்டுவருகிறார் என்று சொல்லி திவான் சமஸ்தானத்தில்

கைத்தொழில் விஷயத்திலும் வியாபார விஷயத்திலும் இனி செய்யப்படப்போகிற விருத்தியைக் குறித்து அடியில் எடுத்துச்சொல்லியிருக்கிறபடி. பெரியோர்.—சமஸ்தானத்தின் அமைப்பும், ஜலமூலமாக மின்சாரம் உண்டுபண்ணி வேலைகள் நடத்த பொருந்தியிருக்கும் இயற்கையான வசதிகளும் உத்தேசத்திலிருக்கும் புதிய துறைமுகம் கட்டி முடிந்தபின் உண்டாகப்போகிற வியாபாரப் பெருக்கமும், ஓடைகள் வழியாகவும் கால்வாய்க்கள் வழியாகவும் ஜனம் சாமான் முதலியவைகள் போக்குவரத்து செய்யும்படியாக செய்யப்படப் போகிறவும் உத்தேசத்திலிருக்கும்படியான ஏற்பாடுகளும் தேங்காய் சாமான்கள், மீன் சாமான்கள், மூங்கில், பிரம்பு மரஉருண்டை, தேக்கு முதலிய ஏதேஷ்டமான பச்சைப்பொருள்களும், சமஸ்தான ஜனங்களுக்குள் பெரும்பாலர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருப்பதும் ஆகிய இத்தியாதி சந்தர்ப்பங்கள், எல்லா வகுப்பாரும் கைத்தொழில் அபிவிருத்தி விஷயத்தில் மிகுந்த பற்றுவைத்து உற்சாகங்கொண்டு உழைப்பதற்குத் தூண்டும் தைரிய அறிகுறிகளாகயிருக்கின்றன என்றும், அரசர் விவசாய விஷயத்திலும் கைத்தொழில் விஷயத்திலும் மிகுந்த பற்றுடையவராயிருக்கிறார்கள் என்றும் அவைகளை விருத்தி படுத்திக்கொண்டுபோக அவர்களால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்யத் தயாராயிருக்கிறார்கள் என்றும், சொல்லி முடித்தனர்.

An Epidemic of Bank Failures.

தொத்துவியாதி என்று சொல்லும்படியான பாங்கு முறிவுகள்.

லாகூரி லிருக்கும்படியான பீபில்ஸ்பாங்க் ஆப் இந்தியா லிமிட்டெட் என்று சொல்லப்படும் பாங்கி சென்ற மாதம் 19௳ கதவை மூடிப்போட்டது. பாங்கின் பிரதான ஸ்தலம் லாகூர். இந்தியாமுழுதிலும் அதற்கு 60 கிளை பாங்கிகளிருக்கின்றன. தலைமை ஆபீசிலிருந்து பிறந்த உத்திரவை அனுசரித்து, கிளைபாங்கிகள் ஒன்றின்பின் ஒன்றாய் கதவுகளை மூடிப்போட்டன. பம்பாய், கல்கத்தா, அலகாபாத், ரெங்கூன், காராச்சி லக்னோ, குவட்டா முதலிய விடங்களிலிருந்த கிளை பாங்கிகளும் உடனே மூடிப்போட்டன. அம்ரிட்சார்பாங்க் லிமிட்டெட் என்கிற பாங்க்கும் செப்டெம்பர் ௴ 20௳ கதவை மூடிப்போட்டன. குஜரன்வாலா என்னுமிடத்தில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட பிஷ்வார் பாங்கும் செப்டெம்பர் ௴ 24௳ வரவு செலவுகளை நிறுத்திப்போட்டன. கராச்சியிலிருக்கும் ஹிந்துஸ்தான் பாங்கும் செப்டெம்பர் ௴ 30௳ படுத்துவிட்டது. பம்பாயிலிருக்கும் கிரடிட் பாங்க் ஆப் இந்தியா (Credit-Bank of-India) என்கிற பாங்கியும் அக்டோபர் ௴ 3௳ முறிந்து போயிற்று. இந்த பாங்கிக்குக் கூட தேசமெங்கும் 12 கிளை பாங்கிகளிருக்கின்றன. பம்பாய் பாங்க்கிங் கோ லிமிட்டெட் (Bambay Banking Co) நாளது ௴ 7௳ முறிந்துபோயிற்று.

பீப்ல்ஸ் பாங்கும், அமிரிட்சார் பாங்கும் அவைகளுடைய கிளைகளுடன் முறிந்துபோனதால் ஜனங்கள் பயந்து பஞ்சாபிலிருக்கும் மற்ற பாங்கிகளில் போடப்பட்டிருந்த பணத்தை திடீரென்று கேட்க, பணக்கசாலா உண்டானது.

பஞ்சாப் நேஷனல் பாங்கும், பஞ்சாப் கோவாபரேட்டிவ் பாங்கும் ஆகிய இந்த பாங்குகள் உள் நாட்டு பாங்குகளாகயிருப்பதுமன்றி ஒழுங்காக நடத்தப்பட்டு நல்ல ஸ்திதியிலிருக்கும்படியான பாங்குகள். இவைகள் எல்லாம் திடீரென்று பாதிக்கப்பட்டன. ஆயினும் இந்த பாங்கியின் டைரக்டர்கள் எல்லாம் சமயத்திற்கு ஏற்றவாறுஒருவருக்கொருவர் உதவிசெய்துகொள்ள வந்தஆபத்து லகியவே போய்விட்டது.

பீப்பில்ஸ் பாங்கியின் கிளைகள் எந்த எந்த ஊர்களிலிருந்தனவோ அவைகளில் எல்லாம் கடன்காரர்கள் மீட்டிங் கூடினார்கள். பங்குதாரிகள் மீட்டிங் செப்டெம்பர் ௴ 29௳ கூடினது. அமிரிட்சார் பாங்குதார்களின் மீட்டிங்

நிகழ் ளீ 12உ நடந்தது. இவ்வளவு நடந்தும் என்ன காரணங்களால் பாங்குகள் முறிந்து போயின என்பதற்கும் இனிமேல் என்ன செய்யப்படவேண்டு மென்பதற்கும் உத்தரவாத முள்ள பிரஸ்தாபம் யாதொன்றும் வெளிவரவில்லை!

பங்குதார்கள் கூட்டம் கூடிப் பேசுவதற்கு முந்தியதினம் லாகூரில் ஆங்கிலத்தில் பிரசுரமாகும் வாராந்திரப் பத்திரிகையாகிய "ஆரியப் பத்திரிகை" லாலா ஹரிகிருஷ்ணலாலின் பாங்கி சம்பந்தமான நடவடிக்கைகளைக் கண்டனம் செய்து வெளிவந்தது. லாலா ஹரிகிருஷ்ணலாலின் சம்பந்தத்தாலேயே பாங்கிகள் முறிந்து விழுந்துவிட்டன என்று சொன்னது; பங்குதார்களின் லக்ஷக்கணக்கான பணம் சிலத்திலும், கட்டடங்களிலும், யந்திரங்களிலும் இம்மாதிரி நஷ்டம் வரக்கூடிய முயற்சிகளில் முடக்கப்பட்டுப்போனதுமன்றி அவரும் அவருடைய சினேகிதர்களும் பணம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்தப் பணங்களை எல்லாம் முழுதிலும் வசூல் செய்யப்படக்கூடிய தல்லவென்றும் பயிரங்கப் படுத்தினது. லாலா ஹரிகிருஷ்ணலாலின் சொந்த கம்பெனியாகிய ஹரிகிருஷ்ணலால் அண்டு கோ என்கிற கம்பெனி எங்தெந்த கம்பெனிகளுக்கு மானேஜிங் ஏஜண்டுகளாக விருக்கிறார்களோ அந்த கம்பெனிகளுக்கே 44 லக்ஷ ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் ஷை பத்திரிகை சொன்னது.

நிற்க, லாலா ஹரிகிருஷ்ணலால் என்பவர் தான் பம்பாய் பீபில்ஸ் பாங்கை ஸ்தாபித்தவர், பாங்கி முறிந்து போனதற்கு ஒருமாதம் முந்தி வரையில் அவரே ஷை பாங்கியில் முக்கியமான பேர்வழியாக இருந்து வந்தனர்.

"ஆரியபத்திரிகா" இன்னும் என்ன சொன்னதென்றால் ஹரிகிருஷ்ணலால் அண்டு சன்ஸ் என்கிற கம்பெனி எங்தெந்த கம்பெனிகளுக்குச் சொந்தக்காரர்களாகவும், பாகஸ்தர்களாகவும், கண்டிராக்ட்டர்களாகவும், குத்தகைக்காரர்களாகவு மிருக்கிறார்களோ அந்தக் கம்பெனிகளுக்கே 13 லக்ஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சொந்த கம்பெனிகளுக்கு 2·32 லக்ஷ ரூபாயும், பல கம்பெனியின் டைரக்டர்களுக்கு ரூ. 12·36 லக்ஷமும், மிஸ்டர் ஹரி கிருஷ்ணலாலின் சொந்த அதிகப்பத்தே 4.48 லக்ஷமும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதே. கடனாளிகளிடமிருந்து ஏன் கடன்கள் வசூல் செய்யப்படவில்லை என்று ஜனங்கள் கேட்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதேமாதிரியாகவே அம்ரிட்சார் பாங்கியின் பணமும் போயிருக்கிறது, 18·15 லக்ஷ ரூபாய் ஆக்ஷேபிக்கப்படக்கூடிய முயற்சிகளுக்குக் கொடுக்கப்பட்டு போயிருக்கின்றன. பங்குதார்களிடமிருந்து பங்குகளுக்காக பீபில்ஸ் பாங்கிற்கு 9·53 லக்ஷ ரூபாயும் அமரிட்சார் பாங்கிற்கு 3·25 லக்ஷமும் வசூலாக வேண்டியது மிருக்கிறது. ஜனங்கள் கேட்கும் கேள்வி என்னவென்றால் "பாங்கியில் ரொக்க கையிருப்பு குறைந்து கொண்டிருந்தபோது, நிலுவைப்பணங்களை ஏன் வசூல் செய்திருக்கக் கூடாதென்பதே!

இவ்வளவு களேவரத்திற்குப் பிறகு கணக்கு பரிசோதகர்கள் அம்பலத்திற்கு வந்தார்கள்! பீபில்ஸ் பாங்கின் டைரக்டர்களுக்கு செப்டம்பர் ளீ 27உ அடியிற் கண்ட கடிதம் எழுதினார்கள் :—பீபில்ஸ் பாங்கு முறிந்து போனதுமுதல் பங்குதார்கள் கூட்டம் கூடுவதாக சொல்லப்பட்ட செப்டம்பர் ளீ 30உ வரையில் பாங்கின் சமாசாரத்தைப் பற்றி அனேகர் விசாரிக்கிறார்கள். உத்திரவாதமுள்ள சமாசாரம் கிடைக்கவில்லை என்று எங்கு பார்த்தாலும் புகாராயிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் பங்குதார்களுடைய நன்மைக்காகபாங்கிற்கு டைரக்டர்களாகிய உங்களுக்கும் நமக்கும் போக்குவரத்தான கடிதங்களையும் சென்றபல பாதி வருடங்களுக்கு எங்களால் பங்குதார்களுக்கு எழுதப்பட்ட ரிப்போர்ட்டுகளையும் பயிரங்கப் படுத்தும்படியாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம். 30-6-1913 உடன் முடியும் பாதிவருஷத்திற்குள்ள பாலன்ஸ் ஷீட்டிலும் லாபநஷ்டக் கணக்கிலும் எடுத்துக் காட்டப்பட்ட அம்சங்களுக்குச் சமாதானம் சொல்லும்படியாக உங்களுக்கு 18-8-1913 ல் கடிதம் எழுதியிருந்தும் அதற்குப்பதில் வரவில்லை என்று பலமுறை ஞாபகப்படுத்தி யிருந்தும் இன்னும் பதில் வரவில்லை; ஆகையால் இந்த கடிதத்தையும் பயிரங்கப்படுத்தும்படியாகச் கேட்டுக் கொள்ளுகின்றோம். பல கடிதங்களும்

புஸ்தகங்களும் எங்களுக்குக் காண்பிக்கப்படவில்லை. இதைப்பற்றி பலதடவை எழுதியும் நீங்கள் காண்பிக்கவில்லை. ஆகையால் அந்தக் கடிதங்களையும் பயிரங்கப்படுத்த வேண்டும். இந்த சமாசாரங்களை எல்லாம் பயிரங்கப்படுத்தாவிடில் எங்களுடைய பெயர் கெட்டுப்போனதாக விருக்கும்படியாக எங்களுக்கு என்ன யோஜனை சொல்லப்படுகிறதோ அதன்படி நடக்க கட்டாயப்படுத்தப்பட்டவர்களாகவிருப்போம்.

பங்குதார்களுடைய மீட்டிங் செப்டம்பர் மீ 30உ நடந்தது. 300 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஹரிகிஷன லாலே சேர்மேனாக யிருந்தார்: ஒருமணி நேரம் வரையில் உருடு பாஷையில் பேசினார். அவர் சொன்னதெல்லாம் கூடி என்னவென்றால் பாங்கிகள் ஒழுங்கினமாக மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வந்ததால் முறிந்துபோகவில்லை என்றும் தம்முடைய சத்ருக்கள் தம்முடைய பாங்கிகளின் ஏற்பாடுகளை பத்திரிகைகளில் ஓயாமல் தூஷித்துக்கொண்டு வந்தபடியால் பாங்கிகள் முறிந்து போய்விட்டன வென்றும் சொன்னார். பட்டுவாடா செய்யப்படவேண்டிய பணமெல்லாம் 1914-ம் வருடம் ஜூலை மீ 12உ வரையில் நிறுத்திவைத்திருந்தால் பங்குதார்களிடமிருந்து வசூல் செய்யப்படவேண்டிய பணங்கள் எல்லாம் வசூல் செய்யப்பட்டு பாங்க் புதிப்பிக்கப்படலாம் என்று பிரரேபணை செய்தார் இன்னொரு யோஜனையும் சொன்னார் அதாவது சிப்பந்திகள் முழுதிலும் அரைச் சம்பளத்திற்கு வேலை பார்க்க சம்மதிக்கும் விஷயத்தில் வைத்துக் கொள்ளப்படலாம் என்று பிரரேபணை செய்ய எல்லோரும் இப்படியே சம்மதித்தார்கள். செலவுகளை ஒடுக்கியும் இன்னும் வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தால் பாங்கியை நடத்த 27 லக்ஷ ரூபாயிருக்கும் இதில் 13½ லக்ஷம் டிபாசிட்டர் பணத்திற்கு ஈடாக வைத்துப் போட்டு பாக்கி 13½ லக்ஷத்தை வேலை செய்யும் மூலதனமாகச் செய்துகொள்ளலாம்; எல்லாம் கூடி கோடியே 6 லக்ஷரூபாய் டிபாசிட்டர்களுக்கு கொடுக்கவேண்டியதிருந்தபோதிலும் பாங்கி ஒழுங்காக மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வருவதுடன் டிபாசிட்டர்களும் பொருமையுடனிருந்தால் எல்லாக் கடன்களும் 5 வருடத்திற்குள் தீர்ந்துபோகுமென்று சொன்னார். தாம் சம்பந்தப்பட்ட வரையில் பாங்க் புதிப்பிக்கப்படும் பரியந்தம் யாதொரு பிரதிப் பிரயோஜனமில்லாமல் வேலை பார்த்துவர தயாராக விருப்பதாகச் சொன்னார்.

அமிரிட்சர் பாங்க் பங்குதார்களும் இதே மாதிரியாக யோஜனை செய்தார்கள்.

பாங்கை மறுபடியும் புதிப்பிக்கும் ஏற்பாடு பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. மிஸ்டர் லாலா கிஷன்லால் கண்டனம் செய்யப்படுகிறார்; பாங்கி முறிந்து போகிறதற்குள்ள எல்லா காரணங்களையும் வெளிப்படுத்தும்படியும் ஆடிட்டர்களுடைய ரிமார்க்கிற்கு டைரக்டர்கள் என்ன சமாதானம் சொல்லப் போகிறார்கள் என்று பொது ஜனங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

MADRAS MARKET REPORTS.
சென்னை மார்க்கட் ரிப்போர்ட்டுகள்.

Piece goods.
சீமை ஜவுளி.

30-9-1913

தீபாவளி வியாபாரம் ஆரம்பமாய்விட்டது. உள்ளூர் மார்க்கட் பொதுவாய் நன்றாயிருக்கிறது. தற்கால ரிப்போர்ட்டுகள் உபாயமாய் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியனவாயிருக்கின்றன. பலரகச் சரக்குகளுக்கு உபாய விசாரணை யிருந்துகொண்டிருக்கின்றது. இரண்டு வாரங்களுக்கு முந்தி யிருந்ததற்கு இப்போது நிலைமை விருத்தியா யிருக்கிறது. பேரங்கள் விசாலமாய் நடக்கின்றன. இந்த ராஜதானியில் வெளியூர் வியாபாரிகள் வந்து நானாவிதமான ரகங்களுக்கு பேரம் செய்து வருகிறார்கள். அவர்களால் நல்ல பேரம் நடக்குமென்று நம்பப்படுகிறது.

(1) கோரா ஷர்ட்டிங்.

எல்லா ரகங்களிலும் நல்ல பேரம் நடத்தப்பட்டு வருகிறது. விசாரணையில் பலஈனமில்லை 50"—38×38½ கெஜங்கள் ரகங்களுக்கு நல்ல பேரம் நடந்து வருகிறது.

ரகங்கள்.	அளவு.			விலை.
14×12	40/"41"×37×37½ கெஜம் ரூபா 5-14-0 முதல் ரூபா 6-2-0			
16×12	,, ,,	6-4-0	,,	6-8-0
16×14, 17×16, 18×16	41"×37 37½	6-9-0	,,	8-4-0
16×12	45"×46"×37/37	7-2-0	,,	7-6-0

(2) கோரா ஜாக்நட்கேள்.

அங்கு மிங்கும் உபாய விசாரணை இருக்கி கிறது. விற்பனை சம்பந்தப் பட்டவரையில் ரிப் போர்ட் செய்யும்படியான விருத்தியில்லை. கை யிருப்பு கனமாயிருக்கிறது. விலைகள் முன் ரிப் போர்ட்டில் சொல்லப்பட்ட மாதிரியாகவே யிருக்கின்றன.

(2) கோரா மல்லுகள்.

இந்த ரகத்தில் பேரம் மந்தமா யிருக்கிறது. குறைந்த விலைக்கு உபாயபேரம் நடந்துவரு கிறது.

ரகங்கள்.	அளவு.		விலை.
18×18	46×20 கெ. ரூ.	4--2-0மு.	4--3-0
,,	51"×	4-10-0	4-13-0
20×20	46"×	4-12-0	4-14-0
24×24	46"×	5--8-0	5-10-0
,,	51"×	6--0-0	6--4-0

(4) கோரா தோவத்திகள்.

எல்லா ரக தோவத்திகளிலும் மிதமான பே ரம் நடந்து வந்திருக்கிறது. எங்கு பார்த்தா லும் அனுகூலமான விசாரணை யிருக்கிறது. மார்க்கட்டின் ரீதி உறுதியாயிருக்கிறது. இந்த ரகம் சப்பந்தப்பட்ட வரையில் மார்க்கட் விரு த்தி முகமா யிருக்கிறது; நல்ல பேரங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.

(5) சலவை மல்லுகள்.

கனத்த ரகங்களுக்கு உபாய பேரம் நடந்து வருகிறது.

ரகங்கள்	விலைகள்.
40"×20 கெ.	ரூ. 5-2 முதல் 5-8-0
51"×	ரூ. 5-8 ,, 6-0-0

1702— ரூ. 6-13; 1703—ரூ. 7-15; கையிருப்பு பூஜ்ஜியம்; சமானமான ரகங்களும் உயர்ந்த ரகங்களும் 8 முதல் 10 அணு குறை ந்து விற்கின்றன, நடுத்தர ரகங்களுக்கும் நாசூக் ரகங்களுக்கும் அங்கு மிங்கும் விசாரணை நட க்கின்றது. கையிருப்பு கனம்.

41"×42"×20 கெ கனத்தமல்லுகள்.

சில்லரை பேரம் உபாயமாய் நடந்து வருகி றது. அங்கு மிங்கும் விசாரணை தாராளமாய் யிருக்கிறது.

சலவை ஷர்ட்டிங்குகள்.

உள்ளூர் வியாபாரிகளுக்கு கனத்த நஷ்டம் உண்டாயிருக்கிறது. கையிருப்பு மிகவும் குறைந்துபோ யிருக்கிறது.

சலவை கேம்பிரீக் சலவை நேயின் சூக் விசா ரணை சம்பந்தப்பட்டவரையில் விருத்தி முகமா யிருக்கிறது,

(6) சீட்டிகள்

கையிருப்பு மிதம்-தீபாவளி வியாபாரம் இன்னும் பலமாக ஆரம்பமாகவில்லை. நல்ல பேரங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன. சீமை மார்க்கட்டுடன் சீர் தூக்கிப்பார்த்தால் சிலரகங் களுக்கு உள்ளூரில் விலை குறைந்து போயிருக் கின்றது. மொத்தத்தில் உள்ளூரில் விலைகள் உறுதியாயிருக்கின்றன.

(7) சேலைகள்

சிகப்பு நீலம் சேலைகளுக்கு உபாய விற்பனை கள் நடந்திருக்கின்றன.

Twist and Yarn.

நூல்.

3—10—13

சீமை மார்க்கட் பலமாயிருக்கிறது. வர்ண நூல் கப்பலில் ஏற்றப்பட நீண்ட வாயுதா கேட்கப்படுகிறது; இன்டென்டுகள் தாராளமா யில்லை. வியாபாரிகள் பயப்படுகிறுர்கள். ஆகையால் தாமதிக்கிறுர்கள். வெளியூர்களிலி ருந்து உபாயபேரம் நடந்துகொண்டிருக்கிறது.

பஞ்சு.

30—9—1913

மார்க்கட் மிகவும் உறுதியாயிருக்கிறது. வெளியூரிலிருக்கும் பஞ்சு ஸ்தலங்களில் எல்

லாம் ரொக்கத்திற்கும் வாய்தாவிற்கும் உபாய பேரம் நடந்து வந்திருக்கிறது. உள்ளூர் பேரம் கிடையாது. ஏன் என்றால் அவ்வுஸ்காரர்கள் காண்டினண்ட் ஏற்றுமதிக்காக வெளியூர்களிலிருந்து ஏறிக்கொண்டு இருக்கும் விலைகளுக்கு சரக்கு வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்காக உள்ளூர் அவுஸ்ஏஜண்டுகள் திருநெல்வேலியிருந்துப்பட்டி பஞ்சை வாங்கிக்கொண்டு வருகிறார்கள். பஞ்சு மார்க்கட் மந்தமாயிருந்தபோது உள்ளூர் ஆலைக்காரர்கள் வாங்கிவிட்டபடியால் இப்போது வாங்குகிறதில்லை.

நாளது தேதி விலை.

வெஸ்டர்ன்ஸ் 1	கண்டி	ரூ. 183 மு. ரூ. 184
நார்தர்ன்ஸ்	,,	ரூ. 180 மு. ரூ. 192
குன்டூர்	,,	ரூ. 175 மு. ரூ. 176
புரோச் (மாத வாயுதா) 782 ராத்தல்	,,	ரூ. 329 மு. ரூ. 330

மணிலாக் கொட்டை.

30—9—1913

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. சூயேஜ், கொளும்பு, மார்ஸயில்ஸ் ஏற்றுமதிக்காக உபாய பேரம் நடந்திருக்கிறது. ஏற்றுமதிக்காரர்கள் இன்னும் சரக்கு வாங்கவில்லை. ஏன் என்றால் இன்னும் சரக்கு உலரவில்லை. கண்டி ரூ. 41-விதம் 200 டன் பருப்பு பேரம் செய்யப்பட்டிருக்கிறது. கொண்டாபுரம் பச்சை சரக்கு உபாயமாய் இறக்குமதி செய்யப்படுகின்றன. சில ஜில்லாக்களில் மழை பெய்யவில்லை. ஆதலால் பயிர் அருந்தல். ஆகவே சமீபத்தில் விலை ஏறுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. நாளது தேதி விலை ரூ. 60 முதல் ரூ. 61 பருப்புக்கு ரூ. 40—8—0 முதல் ரூ. 41.

சர்க்கரை.

30—9—1913

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. சுமார் 3 ஆயிரம் மூட்டைகள் சென்ற வாரம் பெல்லாரிக்கும் பெங்களூருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஜாவாச் சர்க்கரைக்கு நாளது தேதிவிலை 108 ராத்தல் கொண்ட மூட்டை ரூ. 11-முதல் ரூபா 16.

மஞ்சள்.

30-9-1913

மார்க்கட் அமரிக்கை, மந்தம்; கண்டி ரூ 32 ஆக விலை ஏறும் என்று விற்பவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஐரோப்பா கிராக்கி கிடையாது. விலைகள் மாறவில்லை.

மிளகாய்.

30-9-1913

மார்க்கட் அமரிக்கை. மோல்மீன், கொளும்பு, பினாங்கு ஏற்றுமதிக்காக உபாயபேரம் நடந்திருக்கிறது. விலைகள் மாறவில்லை.

கடுகு.

30-9-1913

மார்க்கட் மிகவும் மந்தம். கையிருப்பு ஏதேஷ்டம் விலைகள் தணிந்திருக்கின்றன. நாளது தேதி விலை ரூ 36 முதல் ரூ 37 (சின்னரகம்; பெரிய ரகத்திற்கு ரூ 37.

வெங்காயம்.

30-9-1913

மார்க்கட் மந்தம். நாளது தேதி விலை பெல்லாரிச் சரக்கு ரூ 12 முதல் ரூ 12-8-0; கடப்பைச் சரக்கு ரூ 10 முதல் 11.

கொத்தமல்லி.

30-9-1913

மார்க்கட் மந்தம்; கொளும்பு, ரெங்கூன், காண்டினண்ட் ஏற்றுமதிக்காக சுமாரான பேரம். நாளது தேதி விலை கண்டி ஒன்றுக்கு 5 வராகன் முதல் 6-வராகன்.

பட்டு கழிவு.

30-9-1913

மார்க்கட் உறுதி நாளது தேதி விலை 25 ராத்தல் கொண்ட ஒரு மணங்கு ரூ 17-8-0.

உருளைக்கிழங்கு.

மார்கட் உறுதி. சிகப்பு ரகம் ஆயிரம் மூட்டைகள் கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட் டிருக்கிறது. கூனூர் மேட்டுப்பாளைய மிருந்து புதிய சரக்குகள் வந்திருக்கின்றன. நாளது தேதி விலை சிகப்பு ரூ 22 முதல் ரூ 24; சாதாரணம் ரூ 18 முதல் ரூ 20.

அரிசி.

3)-9-1913

மார்க்கட் மந்தம். வெளியூர் ஏற்றுமதிக்காக உள்ளூரில் சுமாரான பேரம் நடந்து வருகிறது. ரெங்கூன் உடைந்த அரிசி தாராளமாய் இறக்குமதியா யிருக்கிறது. சில ஜில்லாக்களில் மழை பெய்ததால் விலை 4 அணு, 8 அணு குறைந்து போயிருக்கிறது.

22-9-1913 ரிப்போர்ட்டின் படி நாளது தேதி விலைகள்.

29 படி கொண்ட ஒரு மூட்டை	ரூ 7—12—0
40 படி ,, ,, ,,	ரூ 8—13—0
குச்சிலாடி 168 ராத்தல் மூட்டை	ரூ 11—4—0

ஆமணக்கு.

30-9-1913

மார்கட் உறுதி. நாளது தேதி விலை 168 ராத்தல் மூட்டை ரூ 10-8-0 ; சேலம் ரூ 10—10--0

தேக்கு.

30-9-1913

மார்கட் உறுதி நாளது தேதி விலை

L. S. சதுரம்	டன் ஒன்றுக்கு	ரூ 200
R. ,,	,,	ரூ 165
சட்டங்கள் 2 × ½-3 அடி முதல் 5 அடி	,, -	ரூ 164
,, 6 அடியும் மேலும்	,, -	ரூ 186

உலோகங்கள்.

பித்தளைக்கு சென்ற இரண்டு வாரமாக சீமை மார்கட்டில் விலை ஏறியிருக்கிறது. ஆகவே உள்ளூர் விலைகளும் ரூ 305 க்கு ஏறியிருக்கிறது. விலை திடீரென்று ஏறியிருப்பதால் வெளியூர் பேரமில்லை.

இரும்பு.

30-9-1913

நாளது தேதி விலை.

பெல்ஜியன்	ரூ 21½
சுவீடிஷ்	ரூ 38 முதல் 40.

கற்பூரம்.

30-9-1913

ஜப்பான் மட்டம்	ரூ 163
ஹாலண்டு	ரூ 140

சிமிட்டி.

30-9-1913

மார்கட் மந்தம்

கைமார்க்	பீப்பாய்	ரூ 10-0-0
கோலியாத்	,,	ரூ 8-12-0
பீட்டர்	,,	ரூ 9--0-0
லீமார்	,,	ரூ 8-14-0
பிரமிட்	,,	ரூ 9-10-0
சிகப்பு நட்சத்திரம்	,,	ரூ 8-4-0
ஆண் மயில்	,,	ரூ 8-14-0
யானை	,,	ரூ 9--4--0
எஞ்ஜின்	,,	ரூ 8--0--0
காண்டாமிருகம்	,,	ரூ 8--4--0

நிலக்கரி.

மட்டரகம் ரூ 14-8-0 முதல் ரூ 15-8-0

நாணய மார்க்கட்.

4-20-1913

செப்டம்பர் மீ 27 ந் தேதியில் சர்க்கார் பத்திரம் பாங்கியின் விலை ரூ 48-8-0

வாங்கும் விலை ரூ 95-14-0

அக்டோபர் மீ 1உ லும் ஏறக்குறைய அதேமாதிரியாக விருந்தது.

TRADE.
வியாபாரம்.

INDIA'S TRADE.
இந்தியாவின் வியாபாரம்
அதன் ஆச்சரியமான விருத்தி.

:o:

இந்தியா கவர்ன்மெண்டில் ஒரு வர்த்தக இலாக்காவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இலக்காவிற்குத் தலைமையாக விருக்கும் டைரக்ட்டர் ஜெனரல் முக்கியமான சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதி கடந்த பத்துவருட காலத்திற்குள் எவ்வளவு விருத்தி அடைந்து வந்திருக்கின்றது என்று அறிந்துகொள்ள கணக்கு எடுத்திருக்கின்றனர். கடந்த 10-வருஷக் கணக்குடன் முந்திய பத்துவருடக் கணக்கையும் ஒத்திட்டுப் பார்த்து பரிசிலனை செய்திருக்கின்றனர். நாம் செய்துவரும் இறக்குமதிகளுக்குள் சீமை ஜவுளி பிரலமாய் நிற்கின்றது. 1901–02 உடன் முடியும் 10-வருடங்களில் ரூ. 33·94 கோடி பெறுமானமுள்ள சரக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. 1903–04 கணக்கையும் சேர்த்துக் கொண்டால் ரூ. 34·81 கோடி ஆகிறது. 1912-13ல் கணக்கெடுத்ததில் ரூ. 67·71 கோடிக்கு எட்டிவிட்டது. இப்படி ஏறி வருவது திடீரென்று ஏறிவிடவில்லை. ஒவ்வொரு வருஷமாய் படிப்படியாய்க் கீழே இறங்காமல் ஏறிக்கொண்டு வந்திருக்கிறது. அடியிற்கண்ட விபரங்கள் கவனிக்கப்படக் கூடியவை:

சரக்குகள்.	1901--02 உடன் முடியும் 10-வருடத்திற்குச் சராசரி கோடி.	1903–4 கோடி.	1912–13 கோடி.
1. நூல்	2·52	2·14	4·44
2. சீமை ஜவுளி			
கோரா	14·30	13·26	25·11
சலவை	6·43	6·20	13·52
சாயத்துணி	6·36	7·99	14·17
3. பட்டு	1·42	1·83	3·04
4. கம்பளி	1·94	2·15	3·05

1903-04 உடன் முடியும் 10-வருடங்களில் தைக்கும் நூல் 22-லக்ஷத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறபோது 1912-13 உடன் முடியும் 10-வருடங்களில் 30 லக்ஷத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. உலோகங்களும் அவைகளின் சாமான்களுடைய இறக்குமதிகளும் அதேமாதிரியாக விருத்தி அடைந்து வந்திருக்கின்றன. 1903-04 வரையில் இரும்பும் எஃகு சமான்களும் 6-லக்ஷத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கும்போது 1912-13 உடன் முடிவாகும் 10-வருடங்களில் 11½ கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. Yellow Metal 80 லக்ஷத்திலிருந்து ஒரு கோடியே 60-லக்ஷத்திற்கு ஏறியிருக்கிறது. செப்புத் தகட்டினுடையவும் ஜர்மன் வெள்ளியினுடைய இறக்குமதி குறைந்து போயிருக்கிறது. தகரமும் துத்திநாக இறக்குமதி ஏறியிருக்கிறது. மற்றச் சரக்குகளுக்குள் சாயச் சரக்குகள், வர்ணச் சரக்குகள், தைக்கும் யந்திரங்களும் குத்தித் தைக்கும் யந்திரங்களும் கடுதாசும், புஸ்தகங்களும், அச்சடிக்கப்பட்ட சாமான்கள், சோப், சிமிட்டி இவைகளின் இறக்குமதி யெல்லாம் ஏறியிருக்கின்றன. சிமிட்டி 18-லக்ஷத்திலிருந்து 68-லக்ஷத்திற்கும் சோப் 26-லக்ஷத்திலிருந்து 71-லக்ஷத்திற்கும், கடுதாசி 15-லக்ஷத்திலிருந்து 67-லக்ஷத்திற்கும் தைக்கும் யந்திரங்கள் 10-லக்ஷத்திலிருந்து 34—லக்ஷத்திற்கும் சாயச் சரக்குகள் 48 லிருந்து 78-லக்ஷத்திற்கும் விருத்தியாகி வந்திருக்கின்றன. ஆனால் குடை இறக்குமதி 24

விலிருந்து 17-லக்ஷத்திற்குக் இறங்கியிருக்கிறது. ஏற்றுமதிச் சரித்திரமும் இதே மாதிரியாக மிகவும் விருத்தி அடைந்து வந்திருக்கிறது. பச்சைப் பொருள்கள் 1903-04ல் 65·76 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. 1912-13-ல் அவைகளின் ஏற்றுமதி 102·84 கோடி ரூபாய்க்கு ஏறியிருக்கின்றன. இவ்வளவு அதிகப்படியான ஏற்றுமதிக்குக் காரணம் என்னவென்றால், ஆமணக்கு,பருத்தி,மணிலாக் கொட்டை கொப்பரை முதலிய முக்கியமான சரக்குகளைத் தவிர மற்ற விதைகளின் ஏற்றுமதி 1903-04-ல் ரூ. 14·81 கோடியிலிருந்து 1912-13-ல் ரூ.22·53 கோடியாயிருப்பதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது. பஞ்சும், சணலும் 1903-04-ல் 38·59 கோடியாயிருந்தது. ரூ. 57·17 கோடிக்கு ஏறியிருப்பது காரணமாகச் சொல்லப்படுகிறது. தோல் 1903-04ல் 6-கோடி ரூபாய்க்குக் குறைவாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற வருடத்தில் 11·76 கோடிக்கு ஏறியிருக்கிறது. சாயசாமான்களும் பதனிடும் சாமான்களின் ஏற்றுமதி குறைந்துபோயிருக்கின்றன. இதற்குக் காரணம் முக்கியமாக நீலிச்சரக்கு குறைந்துபோயிருப்பதே. பதப்படுத்தின தோலின் ஏற்றுமதி உபாயமாய் ஏறியிருக்கிறது. நூலின் ஏற்றுமதி ஏறவுமில்லை இறங்கவுமில்லை. சீமை ஜவுளியும் அதேநிலையில் நிற்கின்றது. கோணித்துணியும், கோணிப் பைகளின் ஏற்றுமதி ஏறியிருக்கின்றது. கயிறு,பிண்ணாக்கு, மெழுகு—இவைகளின் ஏற்றுமதி மிகவும் திருப்திகரமா யிருக்கிறது.

———:(‡)———

COMPANIES IN THE MADRAS PRESIDENCY.

சென்னை ராஜதானியில் கம்பெனிகள்.

——:(*):——

சென்னை ராஜதானியில் கடந்த 10-வருஷமாக வேலைசெய்துவரும் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளின் எண்ணிக்கையை கவனித்துப் பார்க்கின் இந்தப் பக்கத்தில் கம்பெனிகள் குறைந்து போகாமற்போனபோதிலும் ஒரே நிலைமையிலிருக்கின்றன வென்று தெரிய வருகிறது. 1903-04-ல் வேலை செய்துவந்த கம்பெனிகளின் மொத்த எண்ணிக்கை 492 1912-13-ல் இருதியில் 465-கம்பெனிகள்தா னிருந்தன. இதன் மத்திய காலத்தில் ஏதேஷ்டமான கம்பெனிகள் தோன்றி நீர் குமிழிபோல் மறைந்து போய்விட்டன. உதாரணமாக 1906-07 சுமார் 1067-கம்பெனிகளிருந்தன. இவைகளில் பெரும்பாலானவை மறைந்து போய்விட்டன. மேலே எடுத்துச் சொல்லப்பட்ட கணக்கில் இந்தியாவிற்கு அப்பால் உள்ளவிடங்களில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு சென்னை ராஜதானியில் மட்டிலும் வேலை செய்துவரும் கம்பெனிகள் சேர்க்கப்படவில்லை. இவ்வகை கம்பெனிகள் 40·75 லக்ஷம் பவுன் மூலதனத்துடன் 1911-ல் சென்னை ராஜதானியில் 43-கம்பெனிகளிருந்தன. 1912-ல் பிராவிடன்ட் இன்சூரன்ஸ் சொசயட்டி ஆக்ட்பாஸ் செய்விக்கப்பட்டு அமுலுக்குக் கொண்டுவரப் பட்டதின் பேரில் அனேக சந்தேகப்படக்கூடிய பிராவிடன்ட் சங்கங்கள் தொலைந்துபோய் இச்சங்கங்களின் எண்ணிக்கை மிகக் குறைந்துபோனது. சென்ற வருடத்தில் மட்டிலும் ஏறக்குறைய 100-சங்கங்கள் மூடப்பட்டு போயின. 1908-09ம் வருடத்தின் ஆரம்பத்தில் 453 பிராவிடண்ட் சங்கங்கள் தோன்றி வேலைபார்த்து வந்தன. ஆனால் 1912-13-இறுதியிலோ 24 சங்கங்கள்தா னிருந்தன. இந்த மூடப்பட்ட கம்பெனிகள் இப்போதுதான் மூடப்பட்டிருந்த போதிலும் மூடப்படுவதற்கு வெகு காலத்திற்கு முந்தியே வேலை செய்வதை நிறுத்திப் போட்டன. ஜாயின்டஸ்டாக் கம்பெனிகளில் 47-ம் ஷை வருடத்தில் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டன. இவற்றுள் லேவாதேவி செய்யும் 19-கம்பெனிகளுமிருந்தன. அடியில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் 10-கம்பெனிக

னும் போதுமான பொதுஜன ஆதரிப்பற்றும் பங்குகள் மூலியமாக வசூல்செய்யப்பட்ட மூல தனம் வேலை ஆரம்பிக்க போதுமானதாயில்லா ததை முன்னிட்டும் முடிவிற்குக் கொண்டுவரப் பட்டன.

1. திருநெல்வேலி வாணிவிலாச அச்சுக் கூடம்.

2. இண்டஸ்டிரியல் யூனியன்.

3. எ. டி. ரொஜொரிய கம்பெனி.

4. தேசியா ஸ்டோர்ஸ்.

5. நரசப்பூர் இண்டஸ்டிரியல் இம்புரூவ் மெண்ட் கம்பெனி.

6. நாகப்பட்டணம் இந்தியன் ஸ்டோர்ஸ்.

7. இந்தியன் நெசவு கம்பெனி.

8. தென்னிந்தியன் மோட்டார் எக்ஸ்பிரஸ் கம்பெனி.

9. தென்னிந்தியா புகையிலை கம்பெனி

10. பாரத் கைத்தொழில் வேலைகள்.

இந்தியன் சைக்கில் அண்டு ஜெனரல் இன்ஜி னீரிங் கம்பெனி, கெராலா நெசவு கம்பெனி, பேட்டை சர்க்கரை சுத்தம் செய்யும் கம்பெனி ஆகிய இவை மூன்றும் கடன் வில்லங்கத்திற் குள்ளா யிருக்கின்றன.

முதலில் சொல்லப்பட்ட கம்பெனி 1902ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. பங்குகள் மூலமாக வசூல் செய்யப்பட்ட இரண்டு லக்ஷ ரூபாய் மூலதனத்தை உடைத்தாயிருந்தது. கம்பெனி யில் 21,836 பங்குகள் விடப்பட்டன. அவை களுக்குள் இரண்டு பங்குதார்கள் மட்டிலும் 18,331 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார் கள். கோதாவரி ஜில்லாவில் மூன்று கம்பெனி கள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போய் விட்டன. முதலாவது செக்ரெட்டரியும் டை ரக்டர்களுமிருக்குமிடமே தெரியவில்லையாம். மதிராஸ் இன்ஜினீரிங் கம்பெனி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டுப் போய்விட்டது. ஏன் எனில் வேலைக்குத்தகுந்த தேர்ந்த சிப்பந்திகள் அகப்படுவது துர்லபமாயிருந்ததாம். திருச் சூர் டிம்பர் அண்டு சா மில்கள் கொச்சி சமஸ் தானத்தாருக்குக் கொடுக்கப்பட்டுப் போய்விட் டன. 9 லக்ஷ ரூபாய் மூலதனம் உடைத்தா யிருந்த பொபிலி சுரங்கக் கம்பெனி இரண்டு லக்ஷ ரூபாய் நஷ்டமடைந்திருப்பதாலும் அதி லிருந்து எடுக்கப்பட்ட மண் மட்டமாயிருப்பதா லும் லாபம் வரமாட்டாதென்று முடிவிற்குக் கொண்டுவரப்பட் டிருக்கிறது. கரண்டியால் வரையறுக்கப்பட்டிருக்கும் 95 கம்பெனிகள் கலைந்தும் இறந்தும் போயிருக்கின்றன. சென்ற வருஷம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கும் வியா பாரஞ் செய்யும் கம்பெனிகளுக்குள் இரண்டு லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் ரிஜிஸ்டர் செய் யப்பட்டிருக்கும் தென் இந்தியா நெருப்புப் பெட்டி லிமிட்டெட் தொழிற்சாலையும், ரூ. 20 ஆயிரம் மூலதனத்துடன் ரிஜிஸ்டர் செய்யப் பட்டிருக்கிறவும் கள்ளிக்கோட்டையிலிருக்கும் வெண்ணெய்ப்பண்ணையும் முக்கியமானவை.

Indian Umpires and Piece-goods Disputes.
இந்தியன் மத்தியஸ்தர்களும் சீமை ஜவுளித்தகராறுகளும்.

சீமை ஜவுளி சம்பந்தமாக உண்டாகும் தக ராறுகளை தீர்க்கும்பொருட்டு சர்வேயர்களையும் மத்தியஸ்தர்களையும் நியமிப்பதற்காக பம்பாய் சேம்பர் ஆப் காமர்சும், நேட்டிவ் பீஸ்கூட்ஸ் மெர்ச்சன்ட்ஸ் அசோஸியேஷன் என்கிற சங்கத்தார்களும் அடியிற்கண்டபடி எகிரி மெண்டு செய்து கொண்டிருக்கிறார்கள். சேம் பர் ஆப் காமர்சிற்கு ஆனரபில் சர் சார்லாஸ் ஆர்ம்ஸ்டிராங் நைட் பிரசிடென்ட்; சங்கத்திற் கு ஆனரபில் மிஸ்டர் மனமோகனதாஸ் ராம்ஜி

பிரசிடெண்ட்; எகிரிமெண்டு இவர்கள் பெயரால் எழுதப்பட்டிருக்கிறது.

(1) சேம்பரும் சங்கமும் சர்வேயர்களாக வேலை பார்க்கும்பொருட்டு மெம்பர்களுக்குள் ஒவ்வொரு தரப்பிற்கும் 30 பேர்களுக்குமேல் போகாமல் நியமித்துக் கோள்ளவேண்டும்.

(2) சர்வேயர்கள் தீர்மானத்தில் பேதப்பட்டால், தகரார் மத்தியஸ்தருடைய தீர்மானத்திற்கு அனுப்பப்படவேண்டும். இம்மத்தியஸ்தர்கள் சர்வேயர்களாலேயே நியமிக்கப்படவேண்டும். இம்மத்தியஸ்தர்கள், சேம்பராலும் சங்கத்தாலும் தயார் செய்யப்பட்டிருக்கும் ஜாப்பிதாவிலிருந்து தெரிந்தெடுக்கப்படவேண்டும் அல்லது 4-வது கிளாசில் சொல்லப்பட்டிருக்கிறபடி தயார் செய்யப்பட்ட ஜாப்பிதாவிலிருந்து தெரிந்தெடுக்கப் படவேண்டும்.

(3) மத்தியஸ்தர்களைத் தெரிந்தெடுப்பதில் சர்வேயர்கள் பேதப்பட்ட அபிப்பிராயம் கொண்டால், அவர்களுடைய தீர்மானமும் பேதப்பட்டிருந்தால் ஒரு மத்தியஸ்தரை நியமிப்பதற்காக தகரார் சேம்பர் ஆப் காமர்சினுடைய தீர்மானத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

(4) சேம்பருடைய சேர்மேனும் வைஸ் சேர்மேனும் சங்கத்தினுடைய சேர்மேனும்வைஸ்ச் சேர்மேனும் சேம்பர் ஆவ் காமர்சில் கூடிய ஒரு மீடடிங்கில் மத்தியஸ்தர் ஜர்ப்பிதா தயார் செய்யப்படவேண்டும், இருதரப்பாரும் தங்கள் தங்கள் தரப்பிற்கு நியமித்துக்கொள்ளும் மத்தியஸ்தர்களுடைய எண்ணிக்கைச் சமமாகவிருக்கவேண்டும். ஒவ்வொரு தரப்பிற்கும் 6 பேர்களுக்குக் குறையாமலும் 12 பேர்களுக்குமேற்போகாமலும் நியமித்துக் கொள்ளவேண்டும். சரியான எண்ணிக்கை முதல் மீட்டிங்கில் நிர்ணயிக்கப் படவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட இந்த மீட்டிங்கில் சேம்பருடைய பிரதிநிதிகளும் சங்கத்தினுடைய பிரதிநிதிகளும் முறையே அந்தந்த தரப்பு மத்தியஸ்தர்களைப் பொருக்கி எடுக்க வேண்டும்.

(5) தகரார் சேம்பருடைய தீர்மானத்திற்கு அனுப்பப்பட்டபோது மத்தியஸ்தர்களை தெரிந் தெடுக்கும் பொருப்பும் சேம்பருடையதாகும்.

(6) தகராரைத் தீர்க்கும்பொருட்டு நிபுணர் தேவை என்று சேம்பர் அபிப்பிராயப்பட்டால் மத்தியஸ்தர் ஜாப்பிதாவில் இல்லாத அப்பேர்பட்ட நிபுணரை நியமிக்கச் சேம்பருக்கு பாத்திய மிருக்கிறது.

(7) எந்தத் தகராராக விருந்தாலும் சரி ஒரு மத்தியஸ்த ருடைய தீர்மானமே முடிவாக எண்ணப்பட வேண்டும்.

(8) இந்த எகிரிமெண்டு அக்டோபர் மீ 15உ ஊர்ச்சிதத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும். ஆனால் வேலை இப்போதே மறுபடியும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(9) இந்த எகிரிமெண்டை ரத்து செய்யவேண்டியதா யிருந்தால் ஒரு தரப்பார் மற்ஹெரு தரப்பாருக்கு 6 மாத நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

WEIGHTS AND MEASURES COMMITTEE.

படிகள் படிக்கற்கள் கமிட்டி.

இந்தியாவில் நிறைகளும் அளவுபடிகளும் மாகாணத்திற்கு மாகாணம் பேதப்பட்டிருக்கின்றன. இந்தியாமுழுமைக்கும் ஒரேநிறையும்ஒரே அளவும் ஏற்படுத்த வேண்டு மென்று மேன்மை பொருந்திய கவர்ன்மெண்டார் கருதி இந்தப் பிரஸ்னேயைப்பற்றி ஆராய்ந்து முடிவு செய்யும் பொருட்டு ஒரு கமிட்டி ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்றும் அக்கமிட்டியில் நியமிக்க

ப்பட் டிருக்கும் மெம்பர்களுடைய பெயர்களை யும் "சென்னை வியாபாரியின்" முன் ஒரு சஞ் சிகையில் எடுத்து எழுதியிருக்தோம்• இந்த கமிட்டியார் என்ன என்ன விஷயங்களைப் பற்றி விசாரணை செய்யப்போகிறார்கள் என்றும் எப் பேர்ப்பட்ட சாக்ஷிகளை விசாரிக்கப் போகிறார் கள் என்றும் சாக்ஷி விசாரணை செய்யும்பொரு ட்டு சுற்றுப்பிரயாணம் செய்யப் போகிறார்களா அல்லது கமிட்டி வீற்றிருக்கும் விடத்திற்கு சாக்ஷிகளைத் தருவித்து விசாரணை செய்யப் போகிறார்களாஎன்றும் ஆகிய இத்தியாதிவிஷய ங்கள் யாதென்றும் ஜனங்களுக்குத் தெரியவி ல்லை. பிரஸ்தாப பிரஸ்னை புதிதல்ல. அநேக தடவை கவர்ன்மெண்டாருடைய ஆலோஜனை க்குக் கொண்டுவரப்பட் டிருக்கிறது. ஆனால் அதுவிஷயமாக யாதொரு முடிவும் செய்யப்ப டவில்லை. சென்னை ராஜதானி சம்பந்தப்பட் டவரையில், ஒரே அளவும் ஒரே நிரையும் வழ ங்கி வரும்படி ஏற்பாடு செய்ய கடந்த நூற்று ண்டின் ஆரம்பமுதல் ஆரம்பிக்கப்பட்டது.

முதல் பிரயத்தனம் 1801-ல் செய்யப்பட்டது இதன் பிறகு 1819-ல் செய்யப்பட்ட பிரயத்த னத்தில் 8 படி கொண்ட ஒரு மாக்கால் உப்பள இலாகாவில் அனுஷ்டிக்கப் பட்டதைத் தவிர மற்றபடி இந்தத்தடவையும் யாதொரு முடி வும் செய்யப்படவில்லை. 1833-ல் 180 கிரேயி ன்கள் கொண்ட ரூபாயிடை ஒரு துலாமாக அனுஷ்டிக்கப்பட்டது. 1839-ல் செய்யப்பட் டபிரயத்தனத்திலும் யாதொரு முடிவும் செய் யப்படவில்லை. 1846 அக்டோபர்மீ 20வ பிரசுரஞ் செய்யப்பட்ட போர்ட் செண்ட் ஜியாஜ் கெஜெட்டில் 1847 ம் வருஷம் ஜனவரிமீ 12வ முதல் சென்னை ராஜதானியிலுள்ள ரெவி னியூ, கமிசேரியட் முதலிய கவர்ன்மெண்டு டிபார்டிமெண்டு இலாக்காக்களில் துலாம், பலம் (3 துலாம்), வீசை (120 துலாம்) மண ங்கு (960 துலாம்) ஆகிய இந்தப் பிரகாரமுள்ள நிறைகள் அனுஷ்டிக்கப்பட்டு வரவேண்டுமெ ன்றும் கணக்குகளும் இந்தப் பிரகாரம் எழுதப் பட்டு வரவேண்டுமென்றும் ஒரு விளம்பரம் பயிரங்கப் படுத்தப்பட்டிருந்தது. இந்த நிறை களை பொதுஜனங்கள் அனுஷ்டித்துக் கொண்டு வரவேண்டு மென்று அந்த விளம்பரத்தில் யா தொன்றும் சொல்லப்படாததால் ஜனங்களும் அவைகளை அனுஷ்டிக்க வில்லை. ஆகவே அந் தவிளம்பரம் நமோதாவான விளம்பரமாக விரு ந்ததேயொழிய அதன் பிரகாரம் யாரும் அனு ஷ்டிக்கவில்லை. 1857 ல், இந்தியா முழுதிலு மே ஒரே அளவும் ஒரே நிரையு மிருக்க வே ண்டுமென்பதற்கு சில நூதன பிரரேபணைகள் செய்யப்பட்டன. இந்த பிரரேபணைகளிலும் குறையில்லாதில்லை; இந்த "அளவு நிறை" ப்பி ரஸ்னையைப் பற்றி ஆறாய இந்தியா கவர்ன் மெண்டாருடைய உத்திரவின் பேரில் 1864 ல் ஒரு கமிட்டி ஏற்படுத்தப் பட்டது. இந்த கமி ட்டியார் 180 கிரேயின் கொண்ட ரூபாய்இடை ஒரு துலாமாகஅனுஷ்டிக்கப்படவேண்டுமென்று ஏற்கெனவே செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டை நீக்கிப் போட்டு இங்கிலாண்டு தேச (avoidu-pois) நிறை மாதிரியாகச் செய்துவிட வேண் டுமென்று அபிப்பிராயம் கொண்டார்கள். 175-கிரேயின் கொண்ட நிறையை ஒரு துலாமாகக் கொள்ள வேண்டுமென்று பிரரேபணை செய்தா ர்கள். அடியிற்கண்ட நிறைகள் இந்தக் கமி ட்டியாரால் சிபார்சு செய்யப்பட்டன:—

கிரேயின்.

1 துலாம்		175	
80 ,,	ஒரு சேர்	14000	2-ராத்தல்
50 துலாம்	1 மணங்கு	700,000	100-ராத்தல்
20 மணங்கு		1-டன்	2000-ராத்தல்

கடைசியான எத்தனம் 1890 முதல் 1893-வரையில் செய்யப்பட்டது. ஒரே மாகாணத் தில் நானாவிதமான நிறைகளும் அளவுகளுமிரு ப்பது அசௌகரியத்தை உண்டுபண்ணிக்கொ ண்டு வருவதுமன்றி யோக்கியமான வியாபா

ரத்திற்கு விரோதமா யிருக்கிறதென்று இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டார்கள். இப்படி தானிருக்கிற தென்று புதிய அளவுகளையும் நிறைகளையும் உண்டுபண்ணவும் இணங்கவில்லை. ஏனெனில் ஜனங்களுக்கு பழக்கமில்லாத அளவுகளையும் ஏற்படுத்தி அவைகளை ஜனங்கள் அனுஷ்டிக்கும்படி செய்வதிலிருக்கும் கஷ்டங்களையும் உணர்ந்தார்கள்.

ஆயினும் ரயில்வே முயற்சியும், முனிசிபாலிடிமுயற்சியும், வர்த்தக சங்கங்களின் முயற்சியும் முன்னுக்கிப்போது பலப்பட்டு வந்துகொண்டிருக்கிறபடியால் இந்தியா முழுமைக்கு ஒரே அளவும் ஒரே நிறையும் ஏற்படுத்துவதில் முன்போல் அதிக ஆக்ஷேபம் இப்போதிருக்க மாட்டாதென்றும் அபிப்பிராயம் கொண்டார்கள். ஒருசேருக்கு 80 துலாம், 80 சேர் கொண்டது ஒரு ரயில்வே மணங்கு—இந்தப்படி ஒரு நிறை ஏற்பாடு செய்யப்படலாமென்றும் இது 1871 ம் வருடத்தில் பாஸ் செய்யப்பட்ட ஆக்ட்டில்சொல்லப்பட்டிருப்பதைபார்க்கிலும்சௌகரியமாக விருக்குமென்று இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்பிராயம் கொண்டார்கள். ரூபாயினுடைய இடையையும் துலாமினுடைய இடையை 180 கிரேயினிலிருந்து 175 கிரேயினாகச் செய்துவிடலாமென்றும் அப்படிச் செய்துவிட்டால் இங்கிலீஷ் நிறையாகவும் அளவாகவும் மாற்றிக்கொள்ள சௌகரியமாக விருக்குமென்று லோகல் கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாருக்குப் பிரரேபணை செய்தார்கள். இந்த விஷயம் அப்போதிருந்த ரெவினியூ போர்ட்டாரால் ஜில்லா கலெக்டர்களுடனும் இந்திய ஐரோப்பிய வர்த்தக சங்கங்களுடனும் கலந்து யோஜனை செய்யப்பட்டது. அப்போது சென்னைப் பட்டணத்தில் "Merchants Company" என்று ஒரு வர்த்தகசங்கமிருந்தது. அது அடியிற்கண்டபடி அபிப்பிராயம் கூறினது:—"இப்போது வழக்கத்திலிருக்கும் நிறை அளவுகளைத் தவிர ஏதேனும் நூதனமான நிறையையும் அளவையும் ஏற்படுத்தினால் மிகவும் குழப்பம் உண்டாகும். மேலும் பொது ஜனங்களும் ஏமாந்துபோவதற்கும் ஏதுவாயிருக்கும்." இந்த அபிப்பிராயத்தையும் இன்னும் இந்த விஷயமாக வந்திருந்த அபிப்பிராயங்களையெல்லாம் கவர்ன்மெண்டார் ஆராய்ந்து பார்த்து சென்னப்பட்டணம் கவர்ன்மெண்டார் அடியிற்கண்டபடி அபிப்பிராயப் பட்டார்கள்:—நானாவிதமான அளவுகளும் நிறைகளுமிருப்பதால் அசௌகரிய முண்டாகிறதென்பதற்காவது அல்லது அயோக்கியமான வியாபாரத்திற்கு இடம் கொடுக்கிறதென்று நினைப்பதற்காவது யாதொரு காரணமுமில்லை. உள் நாட்டில் கிராமாந்திரங்களிலும் பட்டணங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிறைகளையும் படிகளையும் எல்லோரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் பல விடங்களில் அவைகள் பேதப்பட்டிருப்பதால் பாதகம் ஏற்படமாட்டாது. எந்தெந்த ஊர்களில் என்ன என்ன படிகள் படிக்கற்கள் வழங்கி வருகின்றன வென்பதை வியாபாரிகள் நன்றாய் அறிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களும் ஏமார்ந்து போவதற்கு ஏதுவில்லை. நிறைகள்பேரிலும் படிகள்பேரிலும் சர்க்கார் முத்திரை குத்தி யிருக்கவேண்டுமென்று ஜனங்களே கட்டாயப் படுத்துகின்றார்கள். இவைகளில் ஏதேனும் சந்தேகமுண்டானால் படிக்கல்லுகளை ஒரு தட்டிலும் ரொக்க ரூபாயை ஒரு தட்டிலும் போட்டு நிறுத்தால் மோசம் வெளிவந்துவிடும். எங்கு பார்த்தாலும் கிராமாந்திரங்களில் இப்போதுகூட நிறைகள் இப்படி பரீக்ஷிக்கப் படுகின்றன. ஜனங்களுக்குத் தெரியாத ஒரு நூதன நிறையை ஏற்படுத்தி அனுபவத்திற்குக் கொண்டுவருவது கனத்த அசௌகரியத்தை உண்டுபண்ணுவதுமன்றி ஜனங்களும் மோசம் போகும்படியாகவிருக்கும். இந்திய நிறைகளும் இங்கிலீஷ்நிறைகளும் ஒரே மாதிரியாக

விருக்கும்படி துலாமின் இடையையாவது அல்லது ரூபாய் இடையையாவது குறைக்கும் யோஜனையை சென்னை கவர்ன்மெண்டார் ஆதரிக்கவில்லை. ஆகவே பாக்கி யோஜனை செய்யப்படவேண்டியதென்னவென்றால் சென்னை ராஜதாணியில் எந்தமாதிரியான நிறைகளையும் அளவுகளையும் ஏற்படுத்தலாமென்பதே!

80-துலாம் கொண்டது ஒரு சேர்.—40 சேர் கொண்டது ஒரு மணங்கு—இந்த ஏற்பாடு ரயில்வே இலாக்காவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. வங்காளத்திலும் இதே மாதிரியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஏற்பாடு ஜனங்களுக்கு நூதனமாயிருக்குமென்றும் ஜனங்கள் சமீப காலத்தில் இதை இலேசில் அறிந்துகொள்ள முடியாதென்றும் ரயில்வே ஸ்டேஷனுக்கு சமீபமாயுள்ள விடங்களில் உள்ளவர்கள்தான் இதை அறிந்துகொள்ள முடியுமென்கிற காரணத்தை முன்னிட்டு இந்த ஏற்பாட்டை கவர்ன்மெண்டார் ஆலோசனையிலிருந்து நீக்கிவிட்டார்கள். 24-துலாம் கொண்டகச்சா சேர்தான் இப்போது இந்த இராஜதானியில் அனுஷ்டானத்தில் பெரும்பாலுமிருந்துவருகிறது. இந்த நிறையே சௌகரியமானதாயிருக்கிறதென்றும் இதையே ஜில்லாக்கள் முழுதிலும் ஏற்படுத்திவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயம் கொண்டார்கள். அளவுகள் சம்பந்தமாக யோஜனை செய்த அளவில் இரண்டாவது தினுசு அரிசி 80 துலாம்கொண்ட ஒரு கச்சா சேருக்கு 120 துலாம் இடையுள்ள சென்னை பட்டணம் படி சரியாயிருக்கிறது. இதையே சென்னை ராஜதானியில் பொதுவான அளவாக வழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றும் சென்னை கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டார்கள். பொதுவாக எல்லாவிடங்களில் ஒரே நிறையையும் அளவையும் அனுஷ்டித்து வரும்பொருட்டு சட்டம் பிறப்பிக்கக் கூடாதென்றும் படிக்கற்களும் படிகளும் சர்க்கார் முத்திரை போடப்பட்டு வருவது போதுமானதென்றும் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டார்கள்.

ஆகவே இந்தப் பிரயத்தனங்களின் முடிவு என்னவென்றால் யாதொரு முடிவான ஏற்பாடும் செய்யமுடியாமல் நிறைகளும் அளவுகளுமிருந்தபடியே யிருக்கட்டுமென்று விட்டுவிட்டார்கள். இது விஷயமாக சட்டம் பிறப்பித்து ஒரே அளவையும் ஒரே நிறையும் அனுஷ்டிக்கக் கட்டாயப்படுத்துவதும் யுக்தமல்லவென்று தீர்மானித்தார்கள். ஒருபுறம் இந்தியன் அளவுகளுக்கும் நிறைகளுக்கும் மற்றொரு புரத்தில் இங்கிலீஷ் நிறைகளுக்கும் அளவுகளுக்கும் சௌகரியமான சம்பந்த முண்டுபண்ணவும் சாத்தியப்படாமல் போய்விட்டது. துலாமின் இடையை 5 கிரேயின் குறைத்தால் வழக்கத்திலும் அனுபோகத்திலிருக்கும் நாணயத்தின் இடையைக் குறைக்க வேண்டியதாயிருக்கிறது. ரூபாயின் இடையைக் குறைக்கும் யோஜனையை சிறிதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஆராய்ந்து பார்க்க வேண்டிய விஷயங்கள் எல்லாம் ஆராய்ந்து பார்த்தாய்விட்டது. இப்போது இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிட்டியார் என்ன முடிவு செய்யப் போகிறார்கள் என்று கவனித்துப் பார்ப்போம்!

—(:-:)—

EXPORTS OF INDIAN TEA.
இந்தியத் தேயிலையின் ஏற்றுமதி.

இந்தியன் தேயிலையின் ஏற்றுமதி 1912-13ம் வருஷத்தில் அடியிற் கண்டபடி ஆச்சரியமான விருத்தியை அடைந்திருக்கிறது:—1911-12ல் நடந்த சமுத்திர மூலியமான ஏற்றுமதியைப் பார்க்கிலும், 17,739,107 பவுண்டு அதிகப்படியாய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. யுனைடெட்கிங்டத்திற்கு 50 லக்ஷம் பவுண்டு அதிகமாய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

ருஷியா 60 லக்ஷம் பவுண்டு அதிகப்படியாய் வாங்கிக் கொண்டிருக்கிறது. ஜர்மனி 17-ஆயிரம் பவுண்டு அதிகமாய் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆஸ்டிரியா—ஹங்காரிதேசம் 42 ஆயிரம் பவுண்டு அதிகமாய் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த வருஷம் இட்டாலியும் ருமேனியாவும் கூட அதிகப்படியாய் எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், ஹாலண்டு, நார்வே, ஸ்வீடன், ஐரோப்பா—துருகி—ஆகிய இந்த தேசங்களுக்கு ஏற்றுமதி மிகவும் குறைந்து போயிருக்கிறது. 332,500 பவுண்டு அதிகப்படியாய் இஜிப்ட்டிற்கு ஏற்றுமதிசெய்யப்பட்டிருக்கிறது. கனடா848,700 அதிகப்படியாய் எடுத்துக்கொண்டிருக்கிறது யுனைட்டெட்ஸ்டேஸ்சுக்கு ஏற்றுமதி 839,000 பவுண்டு குறைந்துபோயிருக்கிறது. சீனா 4000,000 பவுண்டு அதிகப்படியாய் எடுத்துக்கொண் டிருக்சிறது. சிலோனுக்கு ஏற்றுமதி 10,1000 பவுண்டு குறைந்து போயிறுக்கிறது. ஆஸ்டிரேலியா, நியூஜீலாண்டு ஏற்றுமதியும் 625,900 பவுண்டு குறைந்து போயிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவில் எந்த துறைமுகத்திலிருந்து அதிகப்படியான ஏற்றுமதி நடந்தேறி யிருக்கிறதென்று கவனித்தால் கல்கத்தாவும் சிட்டக்காங்கும் என்று விளங்குகின்றது. கல்கத்தாவில் மட்டிலும் சென்ற வருஷத்தைவிட பிரஸ்தாப வருஷத்தில் 120 லக்ஷ பவுண்டும் சிட்டக்காங்கில் 30 லக்ஷம் பவுண்டும் அதிகப் படியாய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. கடந்த 17 வருஷ காலமாக இந்தியன் தேயிலேயும், சிலோன் தேயிலேயும் விசேஷமாய் ஏற்றுமதியாகி வருகிறபடியால் அன்னியதேசத்துச் சரக்குகளின் இறக்குமதி குறைந்துபோயிருக்கிறது. தேயிலேப் பயிர் ஆதியில் சீனாவில்தான் உற்பத்தியானது. அநேக வருஷங்களாக சீனா உலகத்திற்கு தேயிலே சப்ளை செய்யும் தேசமாக எண்ணப்பட்டு வந்தது. அப்பேர்ப்பட்ட தேசம் இத்தேயிலே ஏற்றுமதியில் பின்வாங்கி யிருக்கிறது. அது முன் நிலைமையை அடையமாட்டாதென்று நம்புவதற்கிடமில்லை. இந்தியாவின் தேயிலே ஏற்றுமதியின் விசேஷத்தை கவனிக்கின் இனி இந்தியா சீனாவுக்குப் பதிலாக உலகத்திற்குத் தேயிலே சப்ளை செய்யும் தேசமாயிருந்து அனுப்பிவிக்கும் என்று எண்ணப்படுகிறது. 1912-13-ல் தேயிலேயின் சராசரி விலே ஒரு பவுண்டுக்கு 8·65 பென்சாயிருந்தது. 1911-12-ல் உற்பத்தி விசேஷித்திருந்தபடியால் விலே 9·40 பென்சாயிருந்தது.

—(:o:)—

THE BANK OF MYSORE LIMITED.
மைசூர் பாங்க் லிமிட்டெட்.

சென்ற செப்டம்பர்ஸ் 14வ மைசூர் வர்த்தக சங்கத்தின் தரப்பில் பெங்களூரிலிருக்கும்படியான முக்கியமான வர்த்தகர்களுக்குள் 70 வர்த்தகர்கள் மைசூர் பாங்க் லிமிட்டெட்டிற்கு ஏஜண்டாக நியமிக்கப்பட்டு வந்திருக்கும் மிஸ்டர் W. C. ரோசை (Mr. W. C. Rose) சங்கத்தின் கட்டடத்திலேயே சுமார் மாலே 4மணிக்குக் கண்டு பேசினார்கள். மிஸ்டர் ரோஸ் சங்கத்திற்கு வரும்போது டைரக்டர் செங்கய்யா செட்டியாரும் பாங்க்கின் செக்ரேட்டரியாகவிருக்கும் மிஸ்டர் Y. நரசங்கருவும் கூடவந்திருந்தார்கள். மெசர்ஸ் ஹரிஆனா, திருப்பத்தூர் சிங்கரி நஞ்சாப்பா ஆகிய இன்னும் இரண்டு டைரக்டர்களும் விஜயம் செய்திருந்தார்கள். அவ்விடம் அந்த சமயம் வந்திருந்தவர்களை எல்லாம் சங்கத்தின் காரியதரிசி மிஸ்டர் ரோசுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். மிஸ்டர் செங்கய்ய செட்டியார் மிஸ்டர் ரோசை சபையோருக்கு அறிமுகப்படுத்தி வைக்கும்போது மிஸ்டர் ரோஸ் பாங்க் விஷயங்களில் மிகவும் அனுபோக முடையவர்என்றும் அவரிடம் அமைந்திருக்கும் சரசகுணாதிசயமும் பொருமையும் எல்லோரும் அவரிடம் அன்பு பாராட்டும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 17 NOV 1913 MADRAS

படியாகச் செய்கின்றன வென்றும் இதன் பிறகு பாங்கைப்பற்றி பேசி டிபாசிட் தொகைகளும் குறிப்பிடப்பட்ட பங்குகளின் தொகைகளும் வெகு தீவிரமாய் வசூலாய் வருகின்றன வென்றும், ஆகவே வெகு சீக்கிரத்தில் பாங்க் ஸ்தாபிக்கப்பட்டுப் போகும் என்று சொன்னார். இதன்பிறகு மிஸ்டர் ரோஸ் பெங்களூர் வர்த்தகர்களை பார்ப்பது தமக்கு சந்தோஷமாயிருக்கிறதென்றும் பலவிடங்களில் வியாபாரிகள் கொடுக்கல் வாங்கல் எப்படிச் செய்து வருகிறார்கள் என்றும், அவர்களுடைய விதத்தையும் ஏற்பாட்டையும் அறிந்து கொள்ளாமல் அவர்களுக்குள் ஒரு பாங்கைத் திடீரென்று உண்டாக்குவது உசிதமான காரியமல்லவென்றும், ஆதலால் அவர்களுடைய நோக்கங்களையும் ஏற்பாடுகளையும் மிகவும்கவலையாக கவனிக்கவேண்டியதுடன் அவர்களுடைய விருப்பங்களையும் தேவைகளையும் அறிந்துகொண்டு அவைகளுக்குப் பொருந்தியிருக்கும் படியாக பாங்கை ஸ்தாபிக்க வேண்டுமென்பது தம்முடைய விருப்பம் என்றும் சொன்னார்.

மிஸ்டர் சாட்டர்ட்டனால் பயிரங்கப் படுத்தப்பட்டிருக்கும் "External Trade of Mysore" என்ற தலைப்பெயர்கொண்ட பிரசுரத்தை தாம் கண்ணுற்றதாகவும் பொன்கட்டி,வெள்ளிக்கட்டி, பட்டு சீமைஜவுளி ஆகிய இவைகளின் இறக்குமதி குறைந்து வருகிறதென்று அதில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார். அவரும் இந்த விஷயத்தைப்பற்றி பலவிடங்களில் விசாரணை செய்ததாகவும் பலருடன் கலந்து பேசினதாகவும் அதைக்கொண்டு மிஸ்டர் சாட்டர்ட்டன் பிரசுரத்தில் எடுத்துக் காண்பித்திருக்கும் எண்ணிக்கைகள் பிசகென்று தமக்குத் தெரிகிறதென்றும் மேலும் மிஸ்டர் சாட்டர்டனே பலவிடங்களில் தமக்கு சரியான கணக்கு கிடைக்கவில்லை என்று ஒப்புக்கொண்டிருப்பதாகவும் சொன்னார். கராச்சி, பம்பாய், கல்கத்தா முதலிய விடங்களில் சீமை ஜவுளி இறக்குமதி குறைந்துபோகாமல் ஏறிக்கொண்டிருக்கும்போது மைசூர் சமஸ்தானத்தில் மட்டிலும் குறைந்து போவதற்கு நியாயமில்லை என்று சொன்னார். வர்த்தகத்தை அபிவிருத்தி செய்துகொண்டு போகவேண்டுமென்கிற கருத்துடன் தான், வர்த்தகர்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் அறிந்து அவைகளுக்கு ஒத்தவாறு இந்த பாங்க் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்றும் இப்பாங்கின் நோக்கங்களையும் கருத்துக்களையும் அது எப்படி வேலை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றியும் சொன்னார். நடைமுதல் டிபாசிட்டுகளுக்கு தினசரி இருப்பின்பேரில் 100-க்கு 2 வட்டி அறை வருடத்திற்கு ஒரு முறை கூடினவட்டி முதலுடன் சேர்க்கப்படும்; நடைமுதல் டிபாசிட்டில் ரூ. 100-க்குக் குறையாமலும் 5 ஆயிரம் ரூபாய் வரையில் போட்டுவரலாம். 12 மாதத்திற்கும் அதற்கு மேற்பட்ட பிக்சட் டிபாசிட்டுகளுக்கு வருஷத்திற்கு 100-க்கு $4\frac{1}{2}$ வட்டிகொடுத்துவரப்படும். சேவிங்ஸ் பாங்க்கில்போடும் பணத்திற்கு 100க்கு $3\frac{1}{2}$ வட்டி கொடுக்கப்படும். சாமான்,நகை, சர்க்கார்பத்திரங்கள் அடமானத்தின் பேரிலும் தெரிந்த பத்துவரவுகார்களுக்கு கடன் கொடுக்கப்படும்.சாதாரணக்கடன்கொடுப்பது பாங்கின் கையிருப்பு ஐவேஜியின்பலத்தையும் தேவையையும் பொருத்தது. ஆகவே பாங்கின் மொத்தக்கருத்து என்னவென்றால் முக்கியமாய் வர்த்தகர்களுக்கு உதவிபுரிய வேண்டு மென்பதென்றும் ஆதலால் தாம் வர்த்தகர்களுடைய க்ஷேமத்தை அபிவிருத்திப்படுத்த எவ்வளவு உழைக்கவேண்டுமோ அவ்வளவு உழைக்க தயாராயிருப்பதாகச் சொன்னார்.

இதன்பிறகு P. K. கருடாச்சார் மிஸ்டர் ரோஸ் சொன்னதை எல்லாம் கன்னடபாஷையில் சபையோருக்கு எடுத்துச்சொல்லி இந்த பாங்கியை ஸ்தாபிக்கும் விஷயத்தில் எல்லோரும் சேர்ந்து உழைக்கவேண்டு மென்றும், கவ

ர்ன்மெண்டார் வர்த்தகர்களுக்கு உதவிபுரிய முன்வந்து அவர்களுடைய கடமைகளைச் செய்துவிட்டார்கள் என்றும், இனி பாங்க் நடைபெறும்படியும் பலப்படும்படி செய்யவேண்டிய பொறுப்பு வர்த்தகர்களுடைய தென்றும் சொன்னார். இதன்பிறகு எல்லோரும் கலந்து பேசியும் யோஜனை செய்தும் தத்தம் சந்தேகங்களை தீர்த்துக்கொண்டார்கள். நிற்க, வர்த்த சங்கத்தின் செக்ரேட்டரியாகிய மிஸ்டர் S. K. கிருஷ்ணய்யர், இந்த பாங்கியின் நோக்கத்தையும் அது செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் வர்த்தகர்களுக்கு தெரிவிப்பதற்காக மிஸ்டர் ரோஸ் அன்புடன் இவ்வளவுதூரம் சங்கத்திற்கு வந்ததற்காக வந்தனம் செய்தனர். இச்சமயத்தில் மேநாட்டில் பாங்கிகளின் உற்பத்தியைப்பற்றியும் அவைகள் விருத்தியாக்கப்படுவதைப்பற்றியும்பேசி பாங்க்வசதிகள்எந்ததேசங்களில் செய்யப்பட்டிருக்கின்றனவோ அத்தேசங்கள் பலமானபொருளாதாரமான நிலைமையை உடைத்தாயிருக்கின்றன என்றுசொன்னார். பாங்க்கின் ஆரம்பகாலமாகிய இச்சமயத்தில் டைரக்ட்டர்கள் மிக விமரிசையாக வேலைபார்த்து கனத்த உற்சாகத்துடன் டிபாசிட் பணத்தையும் பங்குப்பணங்களையும் வசூலித்ததை சிலாகித்து அவர்களுக்கு வந்தன மளித்தனர். இந்த பாங்கை ஸ்தாபிப்பதற்காக மேன்மைதங்கிய மகாராஜா அவர்களிடமும் திவான் அவர்களிடமும் வர்த்தகவகுப்பார் நன்றிஉணர்ச்சிபாராட்டி வருகிறார்கள் என்று சொன்னார்..........

....

....

..........மிஸ்டர் செங்கய்ய செட்டியார் அனேக விடங்களுக்குப்போய் பங்குதார்கள் சேர்த்தார்கள் என்றுசொல்லி அவருக்கும் வந்தன மளித்தார். சர்க்கார் உத்தியோகத்திலிருந்து நீங்கி பென்ஷன் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் தங்களுடைய அதிகாரத்தை இழந்ததைப்பற்றி விசனிக்கவேண்டியதில்லை என்றும் அதைவிட உபயோகமான வேலையை ஜனங்களுக்குச் செய்துகொண்டு வரலாமென்றும் இந்த பாங்க்குசமஸ்தானத்தின் வர்த்தகத்தையும் கைத்தொழில்களையும் வளர்த்து சமஸ்தானத்தின் பொருளாதார நிலைமை பலவிதங்களிலும் பலப்படும்படியாகச் செய்யுமென்று சொல்லிமுடித்தனர்.

———(‡):———

Lord Carmichael on Swadeshi.

லார்ட் கார்மிகேல் சுதேசியத்தைப் பற்றி பேசியது.

——:(*):——

சென்ற செப்டம்பர்மீ 5-ம்வ சுதேசிய "மேலா" வை வங்காள கவர்னராய லார்ட் கார்மிக்கல் திறந்தபோது சுதேசியத்தைப்பற்றி அடியிற்கண்டபடி பொருள் படும்படி பேசினார்:—தேசாபிமானத்தை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்குச் சுதேசியம் ஒரு நல்வழி. இதில் தீர்வை விஷயம் அரசாங்க விஷயங்களுமில்லை. வங்காளத்திலிருக்கும்படியான உபாயமான கைத்தொழில் முயற்சிகள் உபகரிக்கப் படலாம். இக்கைத்தொழிற்களின் முயற்சிகளில் விரும்பப்படுவதெல்லாம் கூடி சாமான்களைச் செய்கிறவர்களும் அவைகளை வாங்குகிறவர்களும் ஒன்று சேரும்படி ஒழுங்குபடுத்துவதுதான். நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது ஒன்றுளது. மூலதனமின்றி யாதொரு முயற்சியும் செய்ய இயலாது. இதுவரையில் வங்காள கைத்தொழில் முயற்சிகள் பெரும்பாலும் ஐரோப்பியர் மூலதனத்தைக்கொண்டு நடத்தப்பட்டு வந்தன. இதனால் ஐரோப்பியர்களும் வங்காளிகளும் நன்மை அடைந்துவந்தார்கள். ஆனால் வங்காளிகளுடைய மூலதனத்திற்கும் எதேஷ்டமான விடமிருக்கிறது. இப்பேர்ப்பட்ட மூலதனத்தை வங்காளிகள்தான் சப்ளை செய்யவேண்டும். கவர்ன்மெண்டார் மற்ற தேசத்துப் பிள்ளைகளுக்குச் செய்திருப்பதுபோல உங்களுடைய பிள்ளைகள் செல்வத்தைச் சம்பாதிக்க யோக்கியதை யுடையவர்களாகும்படியான படிப்பைக் கொடுக்கக்கூடும்! அவர்கள் அடைந்த படிப்பைப் பிரயோகப் படுத்தும்படியான வசதிகள் அவர்களுக்கு கொடுக்கப்படவேண்

டும். அப்பேர்ப்பட்ட வசதிகள் கொடுக்கப்படவேண்டுமானால் மூலதனம் தேவையாயிருக்கிறது. உங்களுடைய கைத்தொழில்கள் மூலதனம் போட்டு நடத்தப்படும் கைத்தொழில்களுடன் போட்டிபோட வேண்டியதா யிருக்கிறதென்பதை நீங்கள் மறந்து போகக் கூடாது! அப்பேர்ப்பட்ட மூலதனக்காரர்கள் வங்காள முதலாளிகள் போல வட்டிக்கி எதிர் பார்க்கிற வழக்கமில்லை. மற்ற தேசங்களில் சுதேசிய கைத்தொழில்களை கை தூக்கி விடும் மூலதனக்காரர்கள் என்ன பிரதிப்பிரயோஜனத்தை அடைகிறார்களோ அதைவிட அதிகமாக அடைய விருப்பம் கொள்ளாதவர்கள் உங்களுக்குள் முன் வராம லிருக்கும்பரியந்தம் யாதொரு பலமான முயற்சியும் செய்யப்படுமென்று நம்புவதில் பிரயோஜனமில்லை ஆயினும் வங்காளத்திலுள்ள தனவந்தர்கள் தேசாபிமானிகள் என்றும் புத்தி கூர்மை வாய்ந்தவர்கள் என்றும் நான் நிச்சயமாய் நம்புகின்றேன். வங்காளத்தார் அவர்களுடைய தேசத்தின் இயற்கையான பொருளாதார வசதிகளை முழுதிலும் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள் என்று வெளிப்படையாய்த் தெரியும்படியான காலம் வரும் என்று நான் நிச்சயமாய்நம்புகின்றேன். இந்த சுதேசிய "மேலா" வானது அந்த பாதையின் வாசற்படியே ஒழிய மற்றப்படி வேறில்லை.

BANGALORE WOOLLEN COTTON AND SILK MILLS Co., LTD,

பெங்களூர் கம்பளி, பருத்திப்பட்டு ஆலைக் கம்பெனி லிமிட்டெட்.

1913-ம் வரு ஜூன்மீ 30உயுடன் முடிவாகும் அரை வருஷத்திற்கு அசல்லாபம் ரூ. 15,055-11-1 தேறியிருக்கிறது. அடியிற்கண்டது பாலன்ஸ்ஷீட்:—

கடன்	ரூ.	சொத்து	ரூ.
மூலதனம்	...10,00,000	பிளாக்	12,221,899
ரிசர்வ்ஜவேஜி	...1,73,746	தளவாடங்கள்	13,01,909
பிராவிடெண்ட் பண்டு	...34,113	ஜீவனுள்ள சொத்து	2,321
கடன்	...15,44,328	வரவேண்டிய நிலுவைகள்	1,83,230
லாபமும் நஷ்டமும்	...16,146	ரொக்க ஜவேஜி	57,924
மொத்தம் ரூ.	27,68,333	ரூ.	27,68,333

COIMBATORE SPINNING AND WEAVING CO., Ltd.

கோயமுத்தூர் நெசவு கம்பெனி லிமிட்டெட்

—(:-:)—

1913ம் வருஷம் ஜூன்மீ 30உ யுடன் முடிவாகும் வருடத்திய ரிபோர்ட்:—

இந்த வருடத்தில் ஒரு சமயத்தில் பஞ்சின் விலை அதிக கிராக்கியாயிருந்தபோதிலும் வேலை திருப்திகரமாகவே நடந்தேறியிருக்கிறது. இவ்வருடத்திற்கு செலவு முதலியவைகள் போக அசல் லாபம் ரூபா. 1,10,797—12—8. தேறியிருக்கிறது. சென்ற வருட மீதிக் கையிருப்பு ரூபா 3,514—4—1 ஆக புதிய வருடத்திய ஆரம்ப கையிருப்பு மொத்தம் ரூபா 1,14312—0—9. முதலில் பங்கு ஒன்றுக்கு ரூபா. 4 வீதம் லாபம் பங்கு தார்களுக்கு பட்வாடா செய்யப்பட்டது; மறுபடியும் இன்னொரு 4 ரூபாய் வீதம் பங்கு தார்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் பட்டது. ஆதலால் பங்கு தாரிகள் போட்டபணத்திற்கு 100 க்கு 8 வட்டி கிடைத்திருக்கிறது; பாலன்ஸ் ஷீட் அடியிற் காண்க :—

கடன்	ரூபா	சொத்துகள்	ரூபா
மூலதனம்	9,00,000	பிளாக்	18,050,49
டிபன்ச்சர்கள்	300,000	கையிருப்புச் சரக்கும் ஸ்டோர்களும்	900384
ரிசொவ் ஜவேஜி	6,43010	வரவேண்டிய நிலுவைகள்	2,04,761
மற்ற கடன்கள்	9,99,800	ரொக்க ஜவேஜியும் டிபாசிட்டுகளும்	10,928
லாபமும் நஷ்டமும்	78,312		
ஆகமொத்தம்ரூ	29,21,122	ஆகமொத்தம்ரூ	2921,122

INDIAN BANK LIMITED.

இந்தியன் பாங்க்.

பின் வருமாறு ஆக்டிங் செக்ரெட்டெரி அறிவிக்கிறார் :—

இந்தியன் பாங்கின் சென்ற 30-ந்தேதி யுடன் முடிவடைந்த செப்டம்பர் மாதத்திய கணக்குகள் பரிசோதிக்கப் பட்டு அடியிற்கண்ட விபரங்கள் அறிவிக்கப்படுகின்றன.

தொடுக்கவேண்டிய வகை.

	ரூ	அ	பை
செலுத்தப்பட்ட மூலதனம்	10,00,000	0	0
ரிஸர்வ் ஐவேஜி	1,00,000	0	0
டிபாஸிட்டுகள்	28,93,260	7	3
பில்லுகள்	40,318	14	0
சில்லரைகள்	1,13,205	2	0
ஆக மொத்தம்ரூ.	41,46,784	7	3

ஐவேஜிகள்.

	ரூ	அ	பை
அனுமதிப்படி இன்வெஸ்டு மெண்டுகள்	3649243	4	8
பாங்க் கட்டடம்	146787	4	1
வருமான மில்லா சாமான்கள்	12032	2	4
வசூலாகவேண்டிய பில்லுகள்	40318	14	0
சில்லரைகள்	19058	2	10
கையிலும் பாங்குகளிலும் ரொக்கம்	279344	11	4
மொத்தம்ரூ.	4146784	7	3

:o:

SUEZ CANAL TRAFFIC.
சுயேஸ் கால்வாய் வியாபார சாமான் போக்கு வரவு.

சுயேஸ் கால்வாய் மூலியமாக வியாபார சாமான் போக்கு வரத்தின் 1912-ம் வருஷத்திய சர்க்கார் ரிப்போர்ட்டின்படி 1911-ம் வருடத்தைப் பார்க்கிலும் 1,950,326 டன்னும், 1910-ம் வருடத்தைப் பார்க்கிலும் 3,693,422 டன் பாரமுள்ள சரக்குகள் அதிகப்படியாய்ப் போக்கு வரத்தாயிருக்கின்றன. இப்படி போக்கு வரத்தான சாமான்களுடைய பளுவு அதிகரித்திருப்பதால் அதற்குத் தகுந்தபடி வருவாயும் அதிகரித்திருக்கிறது. அதாவது 1912-ல் 136,423,831 பிராங்குகள் (Francs) வருமானம் வந்திருக்கிறது. இம்மாதிரி வருமானம் இதற்குமுந்தி எந்த வருடத்திலும் வந்ததில்லையாம். அதில் ஏன்ன ஆச்சரியமென்றால் 1912 ஜனவரிமீ முதல் சாமான் போக்கு வரத்து விகிதம் குறைந்துபோயிருந்தும் வருமானம் மிகவும் அதிகப்படியாய் வந்திருக்கிறது.

இந்தக் கனல் வழியாக போக்கு வரத்து செய்யப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை:— 1910-ல் 4,533, 1911-ல் 4,969, 1912-ல் 5,373; இவற்றுள் 1910-ல் 2778, 1911-ல் 3089, 1912-ல் 3335 பிரிடிஷ் பாவட்டாவைச் சேர்ந்தன. பிரஸ்தாப வருடத்தில் பிரிடிஷ் கப்பல்களின் எண்ணிக்கையும் அவைகள் ஏற்றிக் கொண்டுபோன பளுவும் ஏறியிருப்பதுபோலவே ஜர்மன் கப்பல்களும் அவைகளுடைய பாரமும் அதிகரித்திருக்கின்றன. இந்த கனல் வழியாக பிரஸ்தாப வருடத்தில் 4185 வர்த்தக கப்பல்கள் சென்றிருக்கின்றன. அவற்றுள் 3076 பிரிடிஷ் பாவட்டாவைச் சேர்ந்தன.

SIR ADAMJI PEERBHAI.
சர் ஆடம்ஜீ பீர்பாய்.

சென்ற மாதத்தில் இறந்து போனதாக சென்றமீ "சென்னை வியாபாரியில்" நாம் எடுத்துக் கூறியிருந்த சர் ஆடம்ஜீ பீர்பாய் பிதிரார்ஜ்ஜித சொத்தால் முன்னுக்கு வந்தவரல்ல தாமே பாலியமுதல் பிரையாசைப்பட்டு சம்பாதித்து தனவந்தரானவர். 17வது பிராயத்தில் சொற்ப மூலதனத்துடன் பம்பாயில் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். 1867-ல் பம்பாய் ராணுவ இலாக்காவில் சில முக்கியமான கண்டிராக்ட்டுகள் எடுத்தனர். 1870-ல் பட்டாள கூடாரங்களும் தளவாடங்களும் சப்ளை செய்ய கண்டிராக்ட் ஒப்புக்கொண்டார். இந்தக் காலத்தில் பட்டிகர் ஜப்பல்பூர்—ஆகிய இந்த இரண்டு விடங்களில் செய்யப்படும் கூடாரங்

கள்தான் பிரபலியமாய் விளங்கி எல்லோராலும் வாங்கப்பட்டு வந்தன. ஆயினும் சர் ஆடம்ஜீ பீர்பாயின் கூடாரங்களுக்கும் விசேஷ கிராக்கி யிருந்தது. ஈஜிப்ட் சண்டையில் பிரயோகப்படுத்தப்பட்டு வந்த கூடாரங்களில் மூன்றில் இரண்டுபாகம் சர் ஆடம்ஜீ பீர்பாயின் சாலையில் செய்யப்பட்டன. 1879, 1890ல் நடந்த ஆப்கன் சண்டையிலும் அதற்குப் பிறகு நடந்த எல்லையோரச் சண்டைகளிலும் அவருடைய கூடாரங்கள்தான் உபயோகப்படுத்தப்பட்டன. சர் ரிச்சர்ட் டெம்பில் பம்பாய் கவர்னராக யிருந்தபோது 1878-ல் எதேஷ்டமான மால்டீஸ் (Maltese) வண்டிகள் தேவையா யிருந்தன. கன்காரியேஜ் பாக்ட்டரி (Gun Carriage Factory) அதிகாரிகள் ஒரு மாதத்தில் 40-அல்லது 50-தான் தயார் செய்து கொடுக்க சாத்தியப்படுமென்றுசொல்ல சர் ஆடம்ஜி அவர்கள் எழுதிக்கேட்கப்பட்டார், ஆர்டர் பெற்றுக்கொண்ட முதல் 20-தினங்களுக்குள் 500 வண்டிகள் சப்ளை செய்வதாகவும் அதன்பிறகு கூடிய சீக்கிரம் 410- சப்ளை செய்வதாகவும் ஆகமொத்தம் 900-வண்டிகள் சப்ளை செய்வதாகவும் ஒப்புக்கொண்டார். அப்படியே சப்ளைசெய்ய ஜனவரிமீ 17-ந் தேதி உத்திரவு பிறந்தது. அடுத்த மாதம் 20உ 900 வண்டிகளையும் சப்ளை செய்துவிட்டார். இவர் கவர்ன்மெண்டு கண்டிராக்டுகள் மட்டிலும் எடுத்துவந்தார். மற்றப்படி யாதொரு வேலையும் செய்யவில்லை என்று சொல்ல முடியாது; 8-லக்ஷ ரூபாய் மூலதனம் முடக்கி குன்றின்பேரில் "மாதரன்" என்கிற விடத்திற்கு ரயில்போட்டார். தரும காரியங்களிலும் எதேஷ்டமான திரவியம் செலவு செய்தனர். 1908-ம் வருஷத்தில் கராச்சியில் கூடிய முகமதிய கல்வி கான்பரன்சிற்குப் பிரசிடெண்டாக யிருந்தனர். சாஸ்திரப் பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிக்க அதே காலத்தில் அலிகாரா கலாசாலைக்கு தாராளமான நன்கொடை கொடுத்தனர். அவர் கூடார தொழிற்சாலை ஸ்தாபித்ததுமன்றி தோல் பதனிடும் தொழிற்சாலையும் ஸ்தாபித்தரர். பின்னால் சொல்லப்பட்ட இச்சாலையில் குதிரை லகான் சீனி முதலிய சாமான்களும் பூட்ஸ்களும் தயார் செய்யும் ஒரு இலாக்காவும் ஏற்படுத்தினர். சித்திரால், ஆபிரிடிஸ், ஹரா முதலிய சண்டைகளில் பெரும்பாலும் துருப்புகளுக்கு இவருடைய சாலை பூட்ஸ்கள்தான் சப்ளை செய்யப்பட்டு வந்தன. தொழிலில் மகா நிபுணர். முன்யோஜனைக்காரர். அவருடைய மேல் விசாரணையால் நடத்தப்பட்டு வந்த எந்தத் தொழிலும் லாபத்தையே அடைந்து கொண்டு வந்தது,

---

TRADE NOTES.

வர்த்தகக் குறிப்புகள்.

Jute Gambling.

சணல் சூதாட்டம்.

மழை எப்போது பெய்யும் என்று பந்தியங்கட்டி சூதாடுவதும் பஞ்சின் விலை ஏறுமா இறங்குமா என்பதைப்பற்றி பந்தியங்கட்டி சூதாடுவதும் இப்போது கல்கத்தாவில் பெரும்பாலும் ஓய்ந்து போய்விட்டதென்றும் இவைகளுக்கு பதிலாக சணல் சூதாட்டம் தோன்றி மும்மரமாய் பரவி சணலின் விலை மிகவும் உயரும்படி செய்து மார்க்கட்டை கெடுத்துவிட்டதென்றும் இத்தீமையை ஒழிக்க கவர்ன்மெண்டார் சட்டம் ஒன்று பிறப்பித்தால் நலமா யிருக்குமென்றும் பயோனீயர் பத்திரிகையின் கல்கத்தா நிரூபர் அந்த பத்திரிகைக்கு எழுதி யிருக்கின்றனர்.

Embossed Envelopes.

கட்டணஞ்சேர்த்து அச்சடிக்கப்பெற்ற தபால் கவர்கள்.

இப்போது பர்மா தேசத்தபால் ஆபீஸ்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் Embossed Envelopes என்று சொல்லும்படியான தபால் லக்கோடாக்களை வர்த்தகர்கள் உபயோகித்துக்கொண்டு வந்தால் அது அவர்

களுக்கு நன்மையா யிருக்குமென்று பர்மா போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் பர்மா சேம்பர் ஆப் காமர்சுக்கு எழுதியிருக்கின்றனர்.

Burma Industrial Exhibition.
பர்மா கைத்தொழில் காக்ஷி.

பர்மாவில் கைத்தொழில் காக்ஷி ஒன்று நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

The Secretary of the Indian Bank.
இந்தியன் பாங்க் காரியதரிசி.

தென்னிந்தியாச் சேம்பர் ஆப் காமர்ஸ் தரப்பில் லண்டனில் கூடியிருக்கும் நாணயக் கமிஷன் முன்னில் சாக்ஷியம் பகரச் சென்றிருக்கும் மிஸ்டர் வித்யாசாகர் பாண்டியா அவர்கள் நான்கு மாதம்வரையில் அவ்விட மிருப்பார் என்று தெரியவருகிறது.

New Vegetable Ivory.
கந்த மூலங்களில் உற்பத்தியாகும் நூதனத் தந்தம்.

பிரஞ்சு சவுடான் காட்டில் ஹய்பீனு (Hyphaena) என்று ஓர்வகைச் செடி யிருக்கிறதாகவும் அதிலிருந்து உற்பத்தியாகும் பழத்தின் (Albumen) சத்தைக்கொண்டு தந்தம் மாதிரியாகக் கண்ணிற்குப்படும் ஒரு பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்று பாரிஸ் நகரிலிருக்கும் விவசாய சங்கத்திற்கு ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. அப்பழத்தின் சத்தைக்காற்றில் உலரும்படி செய்தால் அச்சத்து இறுகிப்போகிறது வர்ணத்திலும் நயத்திலும் (texture) இயற்கைத் தந்தம்போலத்தோன்றுகிறது.

Electric Saw Mills.
மின்சார வாள் ஆலேகள்.

மெசர்ஸ் டைம்ஸ் அண்டு கோ என்பவர்களுக்கு பேசின்பிரிட்ஜ் ரோடில் மின்சார வாள் ஆலேகளிருந்தன. இந்த ஆலேகளின் மிஷின்கள் தளவாடங்களுடனும் ஆபீஸ்கள் உள்பட ஷை கம்பெனியாருடைய உத்திரவின்பேரில் மெசர்ஸ் கிங் கம்பெனியார் ஏலம்போட ஆனரபில் கான்பகதூர் ஹாஜி இஸ்மேயில் சேபிட்டால் எடுக்கப்பட்டது.

Indian Cotton and Panama Canal.
இந்தியன் பஞ்சும் பனுமா கால்வாயும்.

வட அமேரிக்காவிற்கும் தென் அமேரிக்காவிற்கும் நடுமத்தியில் பனுமா கால்வாய் வெட்டப்பட்டு ஸ்டீமர்கள் அதின்வழியாக போக்குவரத்து செய்யப்படுமாகையால்,ஜப்பான், இந்தியப் பருத்தி இறக்குமதியைக் குறைத்து அமேரிக்காவிலிருந்து விசேஷமாக இறக்குமதி செய்யு மென்றும், பருத்தியினுல் செய்யப்பட்ட சாமான்களே இந்தியாவில் இப்போதைவிட நயமான விலேக்கு விற்பனே செய்யுமென்று சீனுவுக்கும் பசிபிக் தீவுகளுக்கும் பருத்திச் சாமான்களே இன்னும் விசேஷமாக ஏற்றுமதி செய்யுமென்று ஜப்பான் கவர்ன்மெண்டு ரிப்போர்ட்டால் நன்கு விளங்குகின்றது.

Packing Machinery for our Market.
யந்திரங்களே பாக் செய்வது.

யந்திரங்களே பாக் செய்து கப்பலில் ஏற்றப்படவும் அல்லது அதிலிருந்து இறக்கப்படவும் பம்பாய் துறைமுகத்திற்கு அனுப்பும் வர்த்தகர்கள் மிகவும் கவனிக்கவேண்டிய தென்னவென்றுல் கவர்ன்மெண்டார்ஏன்கேஸ்கள்(பொட்டிகள்)உடைந்து போகின்றன என்று விசாரணே செய்ததில் கேஸ்கள்பேரில் அடிக்கப்படும் இருப்புத்தகடு பலமானதாயிருக்கிறதில்லே என்றும் இலேசான பலகையால் செய்யப்பட்ட கேசில் பாரமான சாமான்களே வைத்து பாக் செய்வதாலும் கேஸ்கள் உடைந்துபோகின்றன என்றும் கப்பலிலிருந்தோ அல்லது ரேவின்

வாராவதியிலிருந்து "கிரேனை" க்கொண்டு சாமான்களை எடுப்பதில் பளுவுக்குத் தகுந்தபடி சங்கிலி போடாமல் சின்னச் சங்கிலியால் கட்டுவதாலும் கேஸ்கள் உடைந்துபோகின்றன வென்று தெரியவந்திருக்கிறது.

Artificial Marble.
போலிச் சலவைக்கல்.

ஜெர்மனி தேசத்திலிருக்கும் பொகிமியாவில் மிகவும் நேர்த்தியான சலவை கற்களுக்குப் பர்த்தியாக உபயோகப்படக் கூடிய artificial Marble செய்யும் விதத்தை கண்டுபிடித்திருக்கிறான்.

இந்தப் போலி சலவைக்கல் இயற்கையானதைவிட பலமானதாயும் உறுதியானதாயுமிருப்பதுமன்றி இலகுவில் உடைந்துபோகக் கூடாததாம். மேலும் விலையும் மிகக் கம்மியாயுமிருக்கிறது. இந்தக்கல் பாதி கையாலும் பாதி யந்திரத்தாலும் செய்யப்படுகிறது. [illegible] வேலையும் பளபளப்பு செய்யும் வேலையும் யந்திரத்தால், செய்யப்படுகின்றன. இப்போது பிரத்தியக்ஷத்தில் இவ்விரு வேலைகளும் வியானா பெர்லின், ஹாம்பர்ச், மான்கீம் ஆகிய இந்த இடங்களில் செய்யப்பட்டு வருகின்றன. பிரான்சிலும், ருஷியாவிலும் இந்தக் கல் செய்யும் பாத்தியதையைக் கிரையம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

—(:o:)—

Weights and Measures.
படிக்கல்லும் படியும்.

தென்னிந்தியா பயிர்க்காரர்கள் சங்கத்தின் மீட்டிங்கில் மண்டகாயத்திலிருந்து வந்திருந்த மிஸ்டர் இ. எ. ஹியுஜெஸ் படிக்கல் படியைப் பற்றிய பிரஸ்னை வெகுகாலமாக கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து வருகிறதென்றும் நிறைகளும் அளவுகளும் நாணாவிதமாக விருக்கின்றனவென்றும் ஜில்லாவிற்கு ஜில்லா வெவ்வேறுவிதமாக யிருக்கிறதென்றும் ஆதலால் பெரிய குழப்பம் உண்டாகிறதென்றும் தேசமெங்கும் ஒரே அளவும் ஒரே படியுமாக விருக்கும்படி அயன் கவான்மெண்டார் ஒரு ஏற்பாடு கண்டுபிடித்து ஊர்ச்சிதத்திற்கு கொண்டுவந்தால் எல்லோருக்கும் நன்மையாயிருக்குமென்றும் இந்தப் பிரஸ்னையை ஆராய்ந்து முடிவுசெய்ய இப்போது அயன் கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றும் ஆனால் இந்த கமிட்டி இந்தப் பிரஸ்னையைப்பற்றி ஆராய்வதில் கனத்த கஷ்டங்களிருக்கின்றன வென்றும் ஆயினும் கவர்ன்மெண்டார் இது சம்பந்தமாக பிரயத்தனம் செய்ய ஆரம்பத்திருக்கிறபடியால் இந்த சமயத்தில் இந்த மீட்டிங்கில் அடியிற்கண்ட பிரரேபணை செய்கிறேன் என்றும் பேசினார்:—

"இந்தச் சங்கம் இந்த விஷயமாகச் சென்ற வருஷம் செய்த தீர்மானத்தை உறுதிப்படுத்துவதுடன் நிறைகளையும் படிகளையும் ஒழுங்குபடுத்தி சட்டம் பிறப்பிக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொள்ளுகின்றது,'

இந்தத் தீர்மானம் பாஸ் செய்யப்பட்டது.

—(:o:)—

Fire Works.
பாணச் சரக்குகள்

சென்ற செப்டம்பர்மீ 1வ நடந்த போர்ட் டிரஸ்ட் மீட்டிங்கில் பாணச்சரக்குகள் ஸ்டோர் செய்து வைத்துக்கொள்ள மெசர்ஸ் பெஸ்ட் கம்பெனியார் கொடுப்பதாகச் சொல்லி முன் வந்திருக்கும் கொருக்குப் பேட்டையிலிருக்கும் அவர்களுடைய மருந்துக்கிட்டங்கியை சுமார் 4 மாத காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 வாடகைக்கு அமர்த்த தீர்மானிக்கப்பட்டது.

A Substitute for Petrol.

பெட்ரோலியம் எண்ணெய்க்கு பதிலி.

மோட்டார் வண்டிகள் முதலியவைகளுக்கு பிரயோகப்படுத்தப்பட்டுவரும் பெட்ரோலியம் எண்ணெய்க்கு பதிலாக ஒரு எண்ணெய் நூதனமாகக் கண்டுபிடிக்கும்படியாக ஒரு கமிட்டியார் ஏற்படுத்தப்பட்டார்கள். இக்கமிட்டியார் நிலக்கரியிலிருந்து உற்பத்தியாகும் ஓர் பொருளிலிருந்து வருஷத்திற்கு 400 லக்ஷம் காலன் எண்ணெய் மோட்டார் வண்டிகளுக்குப் பிரயோஜனப்படக் கூடியதாக உற்பத்தி செய்யலாமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த எண்ணெய் உற்பத்தியால் தேசத்தின் உலோகப் பொருளாதாரம் குறைந்துபோக மாட்டாது. இந்த எண்ணெயின் விலை காலன் ஒன்றுக்கு 1—ஷிலிங் 9 பென்ஸ்.

—:(*):—

Tinnevelly-Tiruchendur Railway.

திருநெல்வேலி திருச்செந்தூர் ரேயில்வே.

1912–13 சர்க்கார் வருஷ இறுதி வரையில் திருநெல்வேலி ஜில்லா போர்ட்டார் சொஸ் வரிமூலியமாக ரூ. 695,088 சேர்த்து கவர்ன்மெண்டு பத்திரங்கள்வாங்கியிருக்கிறார்கள். ஆதலால் திருநல்வேலி திருச்சந்தூர் இருப்புப் பாதை போடுவதற்கு மிகவும் சமீபத்தில் வேலை ஆரம்பிக்கப்படும்.

Railway Board.

ரயில்வே போர்ட்.

ரயில்வே போர்டில் சீனியர் மெம்பராயிருந்த மிஸ்டர் W. H. வுட் உத்தியோகத்தை விட்டு நீங்கி சீமைக்குப் போய்விட்டார். மிஸ்டர் வுட் இதற்குமுந்தி பாரன்ஸ்லி ரெயில்வேயிலிருந்தவர். பிறகு பிரஸ்தாப ரெயில்வே போர்ட்டில் 4-வருஷமிருந்து வேலைபார்த்து வந்தனர். அவருக்கு வயது 55. அவர் இப்போது உத்தியோகத்தை விட்டு நீங்கும் விஷயமாக கவர்ன்மெண்டாருக்கும் அவருக்கும் ஏதோ கடிதங்கள் போக்குவரத்தாயின? ஆனால் சமாசாரம் இன்னதென்று வெளிவரவில்லை. இன்னார் இவருக்கு பதிலாக சீனியர் மெம்பராக நியமிக்கப் படுவாரென்றும் தெரியவில்லை. மிஸ்டர் வுட்டும் அவருடைய மனைவியும் ஸிம்லாவில் எல்லோராலும் விரும்பப்பட்டவர்களாக விருந்து வந்தார்கள்.

Scores Over 85000 Miles and Still Running.

85-ஆயிரம் மைல் ஓடியிருக்கிறது இன்னமும் ஓடுகிறது.

அமெரிக்காவில் மோட்டார் வண்டி கம்பெனியாரால் செய்யப்பட்ட ஒரு பாரி மோட்டார்வண்டி 1912-ம் வருடம் வரையில் 85-ஆயிரம் மைல் ஓடியிருக்கிறதாம். 5-ஆயிரம் மைல் வரையில் ஓடி உலகத்தாருக்கு காண்பிக்கிற தென்கிற எண்ணத்துடன் புறப்பட்ட இந்த வண்டி பிறகு இருபதினாயிரம் மைல் ஓடுவதாகத் தீர்மானித்துப் பிரயாணம் செய்து நாள் ஒன்றுக்கு 200-மயில் விகிதம் 100-நாட்கள் ஓடினது.

A Noiseless Fog-Horn.

சப்தமில்லா எச்சரிப்பு.

சமுத்திரத்தில் ஒரு ஸ்டீமர் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது எதிரில் வேறொரு ஸ்டீமர் வந்தால் அப்படி வருகிறதென்றும் அதனுடன் மோதிக்கொள்ளாமலிருக்கும்படி எச்சரிக்கக் கூடிய ஒரு உபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

புகை இன்ஜின்யந்திரத்திலிருந்து நீராவி உண்டாக்கி அதை சமுத்திரத்திற்குள் போகும்படியாகச் செய்தால் காற்று அலை உண்டாகிறதாம். இந்த காற்று அலை போய்க்கொண்டிருக்கும்போதே எதிரில் ஒரு குன்றேனும் அல்லது பனித்தேக்கம் ஏதேனும் தென்பட்டு அதனுடன் மோதிக்கொண்டால் ஸ்டீமர் மேல்தளத்தில் இதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் ஒரு யந்திரத்தில் அடிக்கின்றதாம், இதனால் ஒரு எதிர் ஸ்டீமர் வருகிறது, அல்லது குன்று இருக்கிறது, அல்லது பனித்தேக்கம் இருக்கிறதென்று அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது.

Indian Finance Commission.
இந்தியன் நாணயக் கமிஷன்.

லண்டன் நகரில் கூடி விசாரணை செய்து வரும் இந்தக்கமிஷன் முன்னில் இதுவரையில் சாக்ஷியம் சொன்னவர்களுடைய வாக்கு மூலங்கள் எல்லாம் ஒரு ரிப்போர்ட்டாக தயார் செய்யப்பட்டு சென்ற மாசம் 11-ந்தேதி லண்டனில் பயிரங்கப் படுத்தப்பட்டிருக்கிறது.

இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கு மூலங்களைக்கொண்டு இந்தியன் நாணய விஷயமாக இப்போது ஊர்ச்சிதத்லிருக்கும் ஏற்பாட்டின்பேரில் செய்யப்பட்ட கண்டனங்கள்எல்லாம் தவறுதல் என்று ஒப்புக்கொள்ளும் படியாக விருக்கிறது. Gold Standard Reserve என்று சொல்லும்படியான பொன் கையிருப்பு, மிஸ்டர் பெ. டி. பி. வெப் என்பவரைத் தவிற மற்றவர்கள் எல்லாம் இங்கிலாண்டிலிருக்க வேண்டுமென்றே அபிப்பிராயப் படுகிறார்கள். இந்தியாவில் ஒரு சர்க்கார் பாங்க் ஸ்தாபிப்பதைப் பற்றி அதிகமாக பேதப்பட்ட அபிப்பிராய மில்லாமற்போன போதிலும் உத்தேச ஏற்பாட்டிற்கு அனுகூலமாயில்லை. இந்தியாவில் ஒரு தங்கசாலை ஸ்தாபிப்பதை சாக்ஷிகள் ஆதரித்துப் பேசவில்லை.

Ulundurpet-Chinna Salem Railway.
உளுந்தூர்பேட்டை-சின்ன சேலம் ரயில்வே.

தென் ஆற்காடு ஜில்லா பரிபாலன ரிப்போர்ட்டில் உளுந்தூர்பேட்டை சின்னசேலம் ரயில்வேயைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் திருச்சினாப்பள்ளி வண்டிப்பாதை இன்னும் கட்டி முடியவில்லை என்றும் கட்டி முடிந்தபின்னர் இந்த ரயில்வே ஏற்பாடு கவனிக்கப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சேலம் ஜில்லா போர்டார் சேலத்திலிருந்து சூரமங்கலத்திற்கு ரயில் போடவும் ஆத்தூரிலிருந்து சின்ன சேலத்திற்கு ரயில் போடவும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். தென் ஆற்காடு ஜில்லா போர்டார் ரயில் போடும் விஷயத்தில் இவ்வளவு மெதுவாகவும் அலக்ஷியமாகவு மிருக்கும்போது அந்த இருப்புப் பாதையை கூடலூர் வரையில் போட்டுக்கொண்டுவர உடன்படுவார்கள் என்று நினைக்க முடியாம லிருக்கிறது. ஆனரபில் மிஸ்டர் ஆர். பி. சுப்பராயலு ரெட்டியார் தலைமையாக சில ஜில்லா போர்ட்டு மெம்பர்கள் ரயில்வே போர்ட்டைச் சேர்ந்த சர். டி. ஆர். வொயினைக் கண்டு பேசினார்கள். இந்த சந்திப்பில் இன்னிது பேசினார்கள் என்று வெளி வரவில்லை. தென் ஆற்காடு ஜில்லா பரிபாலன ரிப்போர்ட்டில் ஜில்லாவின் ரோடுகள் ரிப்பேர் செய்யப்பட்டவுடன் ஆயிரக்கணக்கான மணிலாக் கொட்டை வண்டிகள் போகிறதால் அவைகள் கெட்டுப்போகின்றன வென்று சேர்மன் சொல்லியிருக்கிறார். இவ்வளவு பலமான வியாபாரம் நடக்கும் இந்த ஜில்லாவில் ஜில்லா போர்ட் ரயில்போட.....................இன்னும் இணங்காமலிருப்பது விசனிக்கத்தக்கதாயிருக்கிறது.

P & O Mail Contract.
பி அண்டு ஓ தபால் ஒப்பந்தம்.

இப்போது சீமைத் தபால் வாரம் ஒரு முறை வருகிறதல்லவா அதை வார மிரு முறையாகச் செய்ய வேண்டுமென்று சென்னை மதிராஸ் சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்த சபையார் கவர்ன்மெண்டாருக்கு எழுதிக் கொள்ளும்படி 27-8-1913ல் கூடின ஒரு மீட்டிங்கில் ஒரு தீர்மானம் பாஸ் செய்திருக்கிறார்கள்.

——(-:-)——

Stringency of the Money-Market.
பணக் கசாலா.

கவர்ன்மெண்டார் வரிவசூல் மூலியமாக தேசத்திலுள்ள பணத்தை எல்லாம் வாங்கிக் கஜானாக்களில் வைத்து வெளியிடாம லிருப்பதால் தேசத்தில் பணக்கசாலாவா யிருக்கிறதென்றும் அதனால் வர்த்தகர்களுக்கு பாதகம் உண்டாகிற தென்றும் கவர்ன்மெண்டார் பணப்பையை இருக்கிப் பிடித்துக்கொள்ளாமல் கட்டைச் சிறிது தளர்த்திவிட வேண்டுமென்றும் பம்பாய் சேம்பர் ஆப் காமர்சின் பிரசிடெண்ட் சர் சார்லஸ் ஆரம்ஸ்டிராங் 27-8-1913ல் கூடின மீட்டிங்கில் பேசினார்.

———

The Proposed Commercial Congress.
உத்தேசம் செய்யப்பட்டிருக்கிற வியாபாரக் காங்கிரஸ்.

பம்பாயில் வர்த்தக ராஜ குமாரன் என்று பெயர் எடுத்திருக்கும் ஆனரபில் சர் பாசல்பாய் கரிம்பாய் என்னும் கனவான் இந்தியா முழுமைக்கும் பொதுவாக ஒரு வர்த்தக காங்கிரஸ் கூடிவரும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று பம்பாயில் பிரசுரமாய்வரும் பம்பாய் டைம்ஸ் பத்திரிகையில் பிரரேபணை செய்திருந்ததையும், இந்த காங்கிரஸ் ஒன்று இத்தேசத்தில் கூடி வருவதற்குக் காலம் வந்துவிட்டதென்பதற்கு அவர் சொல்லியிருக்கும் காரணங்களையும் நம்"சென்னை வியாபாரியில்" முன் ஒரு சஞ்சிகையில் எடுத்தெழுதியிருந்தோம். ஷை பிரரேபணை வெளிப்பட்டு ஏறக்குறைய இரண்டுமாதங்களாகின்றபடியால், உலக விஷயங்களை நன்குணர்ந்த அனேக கனவான்கள் அதைப்பற்றி அபிப்பிராயங்கள் கூறி யிருக்கின்றனர். அவையாவன :—

டாக்டர் சர். எஸ். சுப்பிரமணிய அய்யர், சி. ஐ. இ. எல். எல். டி :—

(இந்த கனவான் சென்னைப்பட்டணத்தில் பல வருஷகாலமாக ஐக்கோர்ட் ஜட்ஜியாக அமர்ந்து சிறந்து விளங்கி பென்ஷன் பெற்றுக் கொண்டிருப்பவர்).

"சர் பாசல்பாய் கரிம்பாய் செய்திருக்கும் பிரரேபணை ஆழ்ந்து கவனிக்கப்படக்கூடிய யோக்கியதை உடையதென்று நான் நினைக்கிறேன். இந்த அபிப்பிராயத்திற்கு முக்கியமான காரணம் என்னவென்றால் வியாபாரக் காங்கிரஸ் இந்திய வகுப்பாரையும் முகம்மதிய வகுப்பாரையும் ஒன்றுசேர்த்து வைக்கும் இந்தக் காலத்தில் அப்படி இருவகுப்பாரும் சேர்ந்திருப்பது பெருத்த நன்மையைப் பயக்கும். இந்தியன் நேஷனல் காங்கிரசுடன் இப்போது கூடிவரும் இந்தியன் கைத்தொழில் கான்பரன்ஸ் இந்தியன் நேஷனல் காங்கிரசுடன் சேர்ந்ததாக சுபாவத்தில் எண்ணப்படுகிறது. முகமதிய வகுப்பார் காங்கிரஸ் முயற்சியில் கலக்கிறதில்லை. அப்படியே இன்னும் வெகுகாலம் வரையில் கலந்துகொள்ளாம லிருப்பார்கள். முகமதியர்கள் பார்சிகளுக்கு அடுத்தபடி வர்த்தகத்தில் நிற்கிறார்கள். இவர்களும் ஹிந்து வர்த்தகர்களும் ஒன்றுசேர்ந்து இம்முயற்சியில் கலந்துகொள்வது மிகவும் விரும்பத் தகுந்த காரியம். இந்தியாவிலிருக்கும் ஆங்கிலோ-இந்தியர்களும் அவர்களிடம் அனுதாபம் காட்டும்

இங்கிலாண்டிலிருக்கும் அவர்களுடைய சினேகிதர்களும் அரசாங்க விஷயங்களைப்பற்றிப் பேசும் இந்தியன் நேஷனல் காங்கிரசின்மீது அருவெறுப்பான எண்ணம் வைத்து வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட எண்ணம் பிரஸ்தாப வியாபார காங்கிரசினிடம் ஜனிக்க இடங்கொடுக்காமல் வர்த்தகர்கள் சேர்ந்த இம்முயற்சியை காங்கிரசினிடமிருந்து பிரித்துவைத்துக்கொண்டு வருவது அவசியமாயிருக்கிறது.''

சர் R. N. முக்கர்ஜி கே. டி., சீ. ஐ. இ.

(கல்கத்தா ஐக்கோர்ட்வக்கீல் சயன்ஸ் ஆராய்ச்சியில் நிபுணர், விவசாயத்தைப்பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கின்றனர்.)

நான் சர் பாசல் கரிம்பாய் அவர்கள் "டைம்ஸ் ஆப் இந்தியா'' பத்திரிகையில் ஒரு வர்த்தக காங்கிரஸ் கூடும்படி ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்று எழுதியிருந்ததைப் பார்த்தேன். இம்முயற்சி போகப்போக இப்போது நடைபெற்று வரும் இந்தியன் கைத்தொழில் கான்பரன்சுடன் சேர்க்கப்படுமென்றும் அவர் சொல்லியிருப்பதால் இந்த பிரேபணை ஆதரிக்கப்படக்கூடியதா யிருக்கிறது. கைத்தொழில் சித்தாந்தம் சம்பந்தப்பட்டவரையில் இந்தியன் கைத்தொழில் கான்பரென்ஸ் நல்ல வேலை செய்து வருகிறது. ஆனால் அதன் வேலைகளைக் கொண்டு அனுபோகத்தில் இன்னும் யாதொரு நன்மையையும் அடையவில்லை. சர் பாசல் கரிம்பாய் போலொத்த பிரபுக்களுடைய உதவி இந்தியாவின் கைத்தொழில் விருத்தியில் விரும்பத்தகுந்தது.

திவான்பகதூர் கே. கிருஷ்ணசாமிராவ் சி.ஐ.இ.

(இந்த கனவான் இவருடைய பட்டப் பெயருக் கேற்றபடி திருவாங்கூர் சமஸ்தானத்திற்குத் திவானாகயிருந்து இப்போது பென்ஷன் பெற்றுக்கொண்டு சென்னை திருவல்லிக்கேணியில் சுகஜீவனம் செய்துவருகிறார். தேச விஷயங்களை நன்கு ஆராய்ந்து உணர்ந்தவர். சென்னை மாகாண ஜனங்களால் பிரேமுகர் என்று அங்கீகரித்துக் கொள்ளப்பட்டவர்.)

"வருஷவாரி கூட்டப்படும் இந்தியன் கைத்தொழில் கான்பரென்ஸ் நேஷனல் காங்கிரஸ் கூட்டம்போல பார்வைக்குக் காணப்படுகிறது. வியாபார குணாதிசயம் பொருந்திய வியாபார சம்பந்தமான மனிதர்களை இழுக்கிறதில்லை. ஏனெனில் கைத்தொழில் கான்பரன்ஸ் இப்போது அமைந்திருக்கிறபடி அதில் பெரும்பாலும் சேர்ந்திருப்பவர்கள் வியாபார தோரணையில்லாத சாமானிய மனிதர்கள். வியாபார உலகத்தில் கீர்த்திபெயறெடுத்து சிறந்து விளங்காநின்ற சர் பாசல் கரிம்பாய் போலொத்தப் பிரபுக்கள் இம்முயற்சியை ஆரம்பித்தால் இவ்விந்தியா முழுதிலுமுள்ள வியாபார சம்பந்தமுடைய மனிதர்கள் அதில் பற்றுதல்வைத்து கலந்துகொள்ளக்கூடும். இந்தியாவின் பொருளாதார நிலைமையை விருத்திப்படுத்துவதற்கு வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து வியாபாரக் காங்கிரஸ் கூடுவது சரியான மார்க்கமாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். இந்த வியாபாரக் காங்கிரசில் வர்த்தகம் அல்லது கைத்தொழிலில் தங்களுடைய தொழிலாகக் கொள்ளாதவர்களை சேர்த்துக்கொள்ளுகிறதில்லை என்று ஒரு விதி யிருக்கவேண்டும். அதைப் பிரதி வருஷமும் கூட்டக் கூடாது. மூன்று வருஷத்திற்கு ஒருமுறை கூட்டப்படுவது பயனுடையதாக விருக்கும். பிரதிவருஷம் கூட்டினால் கனத்த செலவு உண்டாகுமாகையாலும் ஒரு வருஷம் கூடினதால் என்ன விருத்தி உண்டாயிருக்கிறதென்று உணர ஒருவருஷம் போதாதாகையாலும மூன்றுவருடத்திற்கு ஒரு முறை கூட்டினால் போதுமானதென்று அபிப்பிராயப் படுகிறேன். மூன்று வருடத்திற்கு ஒருமுறை கூடும் "காங்கிரசில் முந்தி மூன்றுவருடத்தில் என்ன என்ன விருத்திகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும் என்ன என்ன சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன வென்பதையும்

இந்தியாவின் பல பாகங்களில் என்ன என்ன கஷ்டங்கள் நேரிடுகின்றனவென்றும் அவைகளுக்கு என்ன பரிகாரங்கள் செய்யலாமென்றும் கவனிக்கப்படவேண்டும். இந்தக் காங்கிரஸ் வர்த்தக ஆலோசனை சபைகளை அதிகரித்துக் கொண்டுபோகவேண்டும். பிரபலமான வியாபார ஸ்தலம் ஒவ்வொன்றிலும் ஒரு வர்த்தக ஆலோசனை சபை இருக்கவேண்டும். இந்த வர்த்தக சபைகள் எல்லாம்கூடினது ஒரு காங்கிரசா யிருக்கவேண்டும். இப்போது உள்ளூரில் ஏற்பட்டிருக்கும் சேம்பர்கள் புத்திசாலித்தனத்துடனும், வைராக்கியத்துடனும், சுறுசுறுப்புடனும் வேலைசெய்துவந்தால், இக்காங்கிரஸ் வருஷா வருஷம் கூட்டப்படுவது அனாவசியம். போகப்போக இப்போதிருக்கும் இந்தியன் கைத்தொழில் கான்பரன்சினுடைய வேலை பிரரேபணை செய்யப்பட்டிருக்கும் வர்த்தக காங்கிரசிற்குப் போய்விடவேண்டும். கைத்தொழிலும் வியாபாரமும் சியம்தேச இரட்டைப்பிள்ளைகள் (Twin) போலிருக்கின்றன. ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்திருக்க முடியாது. இந்தியன் கைத்தொழில் கான்பரன்ஸினால் ஏன் நன்மை உண்டாகவில்லை என்றால் உள்ளூர்களில் கைத்தொழிற் சங்கங்களில்லை. வர்த்தக சங்கங்கள் பலமானதா யிராமற்போனால் பிரரேபணை செய்யப்பட்டிருக்கும் வியாபாரக் காங்கிரசும் வெற்றிபெற மாட்டாது. வியாபாரக் காங்கிரசின் முதல் வருஷத்தியக் கூட்டம் ஆங்காங்கு வர்த்தக ஆலோசனைசபைகள் ஸ்தாபிக்க பிரயத்தனம் செய்யவேண்டும்.''

திவான்பகதூர் அம்பாலால் சங்கரலால் தேசாயி எம். எ. எல். பீ.

"ஒரு வியாபார காங்கிரஸ் கூடும்படி ஏற்பாடு செய்வதைப் பற்றி சர் பாசல் கரிம்பாய் எழுதியிருக்கும் கடிதத்தை நான் வாசித்துப் பார்த்தேன். அவருடைய பிரரேபணையின் விபரம் தெரியாததால் ஒரு புதியவும் பிரத்தியேகமான காங்கிரசிருக்க வேண்டுமென்று சிபார்சு செய்ய நான் தாமதிக்கிறேன். இப்போது கூடிவரும் கைத்தொழில் கான்பரென்சின் அஸ்திவாரம் எல்லா காரியங்களுக்கும் விசாலமானது. ஆனால் வியாபார சம்பந்தமான மனிதர்கள் போதுமானபடி சேர்வார்களே யானால், அவசியமாயிருந்தால் கான்பரென்ஸ் கூட்டும் காலத்தை மாற்றிப்போடலாம். இப்போது செய்யவேண்டிய தென்னவென்றால் வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் உள்ளபடி அமர்ந்திருப்பவர்கள் இப்போது நடைபெற்றுவரும் இண்டஸ்டிரியல் கான்பரன்சில் சேர்ந்து அதை விஸ்தரித்து நடத்திக்கொண்டு வரவேண்டும்.

ஆனரபில் மிஸ்டர் G. K. பராக் பி. எ. எல். பி.

ஆனரபில் சர் பாசல்பாய் கரிம்பாயின் பிரரேபணையில் நம்முடைய கவனத்தைப் பற்றக் கூடிய அநேக அம்சங்களிருக்கின்றன. நம்முடைய ஜனங்களில் பலர் கான்பரென்சில் கலந்திருக்க வேண்டுமென்று விரும்பினால் அது காங்கிரசுடன் சேர்ந்திருக்கவேண்டும். ஏன் எனில் இண்டஸ்டிரியல் கான்பரன்சின் ஆலோஜனைக்குக் கொண்டுவரப்படும் விஷயங்களைப் போலொத்த விஷயங்களைப்பற்றி ஆலோஜனை செய்ய பல ஜனங்களை ஒன்று சேர்ப்பது சாத்தியமாகாத காரியம்!

COMMERCIAL CASES IN COURT.
வியாபார சம்பந்தமான கேசுகள்.

சென்னப்பட்டணம் ஹைகோர்ட்.

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் முன்பாக.)

9-10-13.

ஒரு பாரிவியாபாரியின் பேரில் கேஸ்.

சென்ற மார்ச்சு மாதம் 2-ந் தேதியன்று விருதுபட்டியில் பெருத்த வியாபாரியாகிய ஷண்முகம் பிள்ளை என்பவர் முத்துக்கருப்ப தேவனிடம் 32-மூட்டை பருத்தியை ரூபா 625 சொச்சத்திற்கு விலைபேசி வாங்கி, முத்துக்கருப்ப தேவன் தனக்குப் புரோநோட்டின்மேல் கொடுக்க வேண்டிய 300-ரூபாயைக் கழித்துக் கொண்டு 126-ரூபாயைக் கொடுத்து 22-மூட்டையின் விலைக்குதான் முத்துக் கருப்பதேவன் உரியவனென்றும் மீதி 10-மூட்டை வேறொரு கலுவத் தேவனுடைய தென்றும் அந்த 10-மூட்டை விலைக்குக் கலுவத்தேவன் கணக்கில் வரவு வைத்து விட்டதாகவும் சொல்லி அனுப்பி விட்டதன் மேல், முத்துக்கருப்ப தேவன் தனக்குப் பருத்தி கொடுத்த முதலாளியாகிய ஆதிமுத்து நாடானிடம் 32-மூட்டையும் முத்துக்கருப்பனது தானென்றும் கடிதம் எழுதி வாங்கி, 2-தினத்திற்குப் பிறகு கொண்டு வந்து ஷண்முகம் பிள்ளையை அந்த 10 மூட்டைக்கும் பணம் கேட்டர். ஷண்முகம் பிள்ளை "கொடுக்கமாட்டேன் போ" என்று சொல்லி முத்துகருப்பனை கடையை விட்டு வெளியேபோகச் செய்தார்.

இந்த விவரங்கள் ருஜுவானதின்மேல் இ.பி. கோ 406-செக்ஷன்படி நம்பிக்கை மோசக் குற்ற மாகிறதென்று கருதி சாத்தூர் சப்மாஜிஸ்டிரேட் ஷண்முகம்பிள்ளைக்கு 6-வாரக் கடுங்காவலும் 200-ரூபா அபராதமும் விதித்தார்.

அப்பீலில் அது உறுதி செய்யப்பட்டதின் மேல், சென்ற ஜூன் மாதத்தில் ஹைக்கோர்ட்டார் ஜாமீனில் எதிரியை விடும்படி உத்தரவிட்டார்கள்.

இன்று விஜாரணையில் ஜட்ஜிகள், ருஜுவான அம்சங்களால் நம்பிக்கை மோசம் ஏற்படவில்லையென்று அபிப்பிராயப்பட்டு ஷண்முகம் பிள்ளையை விடுதலை செய்யவும் அபராதத் தொகையைத் திருப்பிக் கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்கள்.

ஷண்முகம் பிள்ளை தரப்பில் அட்வொகேட் M. O. பார்த்தசாரதி அய்யங்காரும், வக்கீல் மிஸ்டர் அமிர்த ஜெகதீசுவர அய்யரும் ஆஜரானார்கள்.

ப்ரஸிடேன்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட், ஜியார்ஜ் டவுன்.

(மிஸ்டர் W. S. மார்ஷல் முன்பாக)

23-9-13.

நம்பிக்கை மோசம்.

சென்னை பிராட்வேயிலுள்ள மெஸர்ஸ் ஹாரிஸன் கம்பெனியின் ஜெனரல் மானேஜரான மிஸ்டர் P. சுப்பராவின் ரிப்போர்ட்டின் மேல் B. டிவிஷன் போலீஸார் மேற்படி கம்பெனியில் வேலையாயிருந்த மிஸ்டர் W. மிச்சல்ஸ் என்பவர், மெக்கானிக்கல் இஞ்சினீரான மிஸ்டர் டிக்கான்ஸ் என்பவரிடம் பெற்ற ரூபாய் 58-12-6 நம்பிக்கைத் துரோகம் செய்ததாகக் குற்றம் சாட்டிக் கொண்டு வந்தார்கள்.

பிராஸிகியூடிங் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கனக சபாபதி அய்யர் கேஸை நடத்த, எதிரிதரப்பில் வக்கீல் மிஸ்டர் வேணுகோபால் செட்டியார் ஆஜராகி வாதித்தார்.

மாஜிஸ்டிரேட் பிராஸிகியூஷனுக்காக சிலசாட்சிகளை ரிக்கார்ட் செய்து கொண்டு எதிரியின்மேல் இ. பி. கோ. 408 வது செக்ஷன்படி குற்றமேற்படுத்தினர். எதிரி தன் குற்றத்தை ஒத்துக் கொண்டார்.

எதிரி வக்கீல் எதிரியின் நற்சாட்சிப் பத்திரங்களையும் அவருடை கௌரவ அந்தஸ்தையும் பற்றிப் பேசி அவ்விஷயத்தில் இரக்கங் காட்டவேண்டு மென்று மாஜிஸ்டிரேட்டைக் கேட்டுக் கொண்டார்.

மாஜிஸ்டிரேட் குற்றவாளிக்கு சொற்ப தண்டனையாக, ஒரு நாள் கோர்ட் கலையும் வரையில் காவலும், 50-ரூபாய் அபராதமும் விதித்து, அந்த அபராதத் தொகையை எதிரி செலுத்தாவிட்டால் ஒருமாதக் காவலுக் குள்ளாகும்படி தீர்ப்புச் செய்தார்.

சென்னை ஐக்கோர்ட்டு.

அசல் தரப்பு.

(ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்)

(1)

சவுத் இந்தியன் இண்டஸ்டிரியல்ஸ் லிமிடெட் சம்மந்தமாக ஒரு மனு.

மனுதார்கள்:—ஹாஜி இஸ்மால்சேட் அண்டு சன்ஸ்.

எதிர் மனுதார்கள்:—ஹாஜி பக்கீர் முகம்மத் சேட் அண்டு கம்பெனி.

மனுவின் விபரம்:—ஹாஜி இஸ்மேல் செட் அண்டு சன்ஸ் கோர்ட்டில் ரூ. 3,53,726-12-0 செலுத்தினதின்பேரில் ஹாஜி இஸ்மேல் சேட் அண்டு கம்பெனி என்பவர்கள் சவுத் இந்தியன் இண்டஸ்டிரியல் கம்பேனி லிமிடெட்டில் அவர்களுக் கிருக்கும்படியான 12500 சாமானியப் பங்குகளையும் 3922 முதல் பாத்தியதையுடைய பங்குகளையும் தங்கள் பேருக்கு மாற்றிப் போடும்படி அவர்களுக்கு உத்திரவு செய்ய வேண்டு மென்றும் தென்னிந்தியா இன்டஸ்டிரியல் கம்பெனியார் அவர்களுடைய பங்கு ரிஜிஸ்டரில் முதல் மனுதாரின் பெயரை ரிஜிஸ்டர் செய்யும்படியாக உத்திரவு செய்யவேண்டு மென்று ஹாஜி இஸ்மால்சேட் அண்டு சன்ஸ் ஐக்கோர்ட் அசல்தரப்பில் மனு செய்து கொண்டார்கள்.

மனுதார்கள் தரப்பில் பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாஸ் ஆஜராகி அடியிற்கண்டபடி பேசினர்: "எதிர் மனுதார்கள் சவுத் இண்டியன் இன்டஸ்டிரியல் கம்பெனியிலிருக்கும்படியான தங்களுடைய பங்குகளை விற்றுப் போடுவதாக மனுதார்களுடன் 28-7-1913-ல் ஒப்பந்தம்செய்தார்கள். மனுதார்களும் சம்மதித்தார்கள். இதன்பிறகு எதிர் மனுதார்கள், உடனே செய்து முடிக்கும்படியான சில நிபந்தனைகளை மனுதார்கள் செய்து முடித்தா லொழிய அவர்களுக்கு பங்குகள் விற்பனை செய்யப்பட மாட்டாதென்று மனுதார்களுக்கு எழுதினார்கள். மனுதார்கள், அதற்கு ஆதியில் அப்படி பேசி ஒப்பந்தம் செய்யப்படவில்லை என்றுபதில் எழுதிவிட்டு ஒப்பந்தத்தை ஊர்ஜிதப்படுத்த வியாஜ்ஜியம் செய்யப்படு மென்று 1913 ஆகஸ்ட் மாதம் 1உ எதிர் மனுதார்களுக்கு நோட்டீசும் கொடுத்தார்கள் ஆகஸ்ட்மீ 2 உ எதிர்மனுதார்கள் சவுத் இந்தியன் இண்டஸ்டிரியல்ஸ் கம்பெனியை முடிவுக்குக் கொண்டு வந்து விடவேண்டுமென்று பிரஸ்தாப கோர்ட்டில் மனுசெய்து கொண்டிருப்பதின் கருத்தென்னவென்றால் மனுதார்கள் மேலே சொல்லப்பட்ட பங்குகளை விடக் கூடாதென்பதே. பிரஸ்தாப மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிற பிரேயர்படி கோர்ட்டார் ஆர்டர் செய்யாவிட்டால் மனுதார்களுக்கு ஈடுபடுத்தமுடியாதநஷ்டமுண்டாகும்."

மனுதார்கள் தங்களுடைய பெயரை ரிஜிஸ்டரில் பதிவு செய்யும்படி கம்பெனியைக் கேட்க மனுதாருக்கு என்ன பாத்தியதை யிருக்கிறதென்று கோர்ட்டார் பாரிஸ்டரைக் கேட்டார்கள்.

அதற்கு பாரிஸ்டர் கம்பெனியார் பரிகாரம் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்று சொல்லி அதற்கு அனேகபிரமாணங்களை எடுத்துக்கூறினர்.

கோர்ட்டார் உத்திரவு:—"கம்பெனியின் ஆர்டிக்கிள்ஸ் ஆப்அசோஷியேஷன் (Articles of Association) படி நடந்துகொள்ள மனுதார்கள் தவறிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய பெயரை கம்பெனி ரிஜிஸ்டரில் பதிவு செய்வதற்கு மனுதார்கள் போதுமான காரணம் காட்டவில்லை. மனுதார்கள் கோர்ட்டில் மனுசெய்து கொள்வதற்காவது பாத்தியதையிருக்கிறதென்று ருஜுப்படுத்தவில்லை. இந்தமனுவை விசாரணை செய்து தீர்மானிப்பதற்கு முதலாவது இந்தியன் கம்பெனி ஆக்ட் 58 வது பிரிவின்படி இந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று நான் நினைக்கிறேன். வேண்டுமானல் மனுதார்கள் வியாஜ்ஜியம் கொண்டுவருவது தகுதியாயிருக்கும். அந்த வியாஜ்ஜிய விசாரணையில் கோர்ட்டார் தஸ்தாவேஜு சாக்ஷியங்களையும் வாக்குமூலங்களையும் முறையேபார்த்தும் கேட்டும்விட்டு உத்திரவு செய்ய அபிப்பிராயப்பட்டாலும் படலாம்." என்று நியாயம் சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

---

(2)

In the matter of South Indian Industrials.

—:(*):—

சவுத் இந்தியன் இண்டஸ்டிரியல் கம்பெனியை முடிவுசெய்வதற்குச்செய்துகொள்ளப்பட்டமனு.

மனுதார்கள் மெசர்ஸ் ஹாஜி பகீர் முகமத் சேட் அண்டு சன்ஸ்,

எதிர் மனுதார்கள்: மெசர்ஸ் ஹாஜி இஸ்மேல் சேட் அண்டு சன்ஸ்.

மனுவின் விபரம்: சவுத் இந்தியன் இண்டஸ்டிரியல் கம்பெனியை முடிவு செய்துவிடவேண்டுமென்று ஐக்கோர்ட் அசல்தரப்பில் மனு செய்து கொள்ளப்பட்டது. மனுவின் விபரம், மனுதார் தரப்பிற்கு ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் அடியில் கண்டபடி பேசியிருப்பதைக்கொண்டு நன்கு அறிந்து கொள்ளலாம்.

லாயர்கள்: மனுதார் தரப்பிற்கு மெசர்ஸ் ரென்கான்ட்டர், திருமலைப்பிள்ளை இவர்கள் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மண்டும் இண்டஸ்ரியல் கம்பெனி தரப்பிற்கு சொலிசிட்டர்களாகிய மெசர்ஸ் ஷார்ட் அண்டுபியூஸ் உதவியைக்கொண்டு மிஸ்டர் நார்ட்டனும் ஆனரபில் ஹாஜி இஸ்மேல்சேட் தரப்பிற்கும் மெசர்ஸ் ஷார்ட் அண்டுபியூஸ் உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் நன்ஜன்ட் கிரான்ட்டும் முந்திய பங்கு பாத்திதை உடைய நான்கு பங்குதார்கள் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் G. C. ஆடமும் மெசர்ஸ் C. யூனஸ் சேட்டுக்கும் சதார் சேட்டுக்கும் வக்கீல்கள் மெசர்ஸ் C. P. ராமசாமி அய்யர், C. K. மாதவநாயர், மிஸ்டர் A. துரைசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மாண்டு அடியிற்கண்டபடி பேசினார்:—மனுதார்களும் அவருடைய குடும்ப மெம்பர்கள் ஒவ்வொருவரும் இந்தகம்பெனியில் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து 100 ரூ. விலை மதிப்புள்ள கம்பெனியின் 25 ஆயிரம் சாதாரணப்பங்குகளில் 12,500பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கம்பெனியின் 100-ரூபா விலை மதிப்புள்ள முந்திய பாத்திதை உடைய 10 ஆயிரம் பங்குகளில் 3922 பங்குகளும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவையன்றி கம்பெனி 5 பிராமிசரி நோட்டுகள் எழுதிக்கொடுத்து மனுதார்களிடம் கடன் வாங்கின வகையில் மனுதார்களுக்கு கம்பெனியிடமிருந்து ரூ. 1,96,500 அசலும் வட்டிக்காக ரூ. 5,589 கிடைக்கவேண்டிய திருக்கிறது. இதன்பிறகு கம்பெனி மூன்று பிராமிசரி நோட்டுகள் மனுதார்களுக்கு எழுதிக்கொடுத்துக் கடன்வாங்கின வகையில் அசலுக்காக ரூ. 2,77,500-ம் வட்டிக்காக ரூ. 5111ம் மனுதார்களுக்கு வரவேண்டியதா யிருக்கிறது. கம்பெனி மனுதார்களுக்குப் பணம் செலுத்தத் தவறி 1913 ஜனவரி மாதம் 12ந்தேதியில் ரூ. 2,77,500 மனுதார்களுக்கு பாக்கி கொடுக்க வேண்டியதாயிருந்தால் கம்பெனி மேற்படி தொகைக்கு மனுதார்கள் பெயரில் டிபன்ச்சர் கடன் சீட்டு பிறப்பிக்க வேண்டுமென்று கம்பெனியும் மனுதார்களும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். 1913-ஜனவரியில் கம்பெனி கடனையும் தீர்க்கவில்லை மனுதார்கள் பெயரால் டிபன்ட்சர்களும் பிறப்பிக்கவில்லை. கடனைத் தீர்க்க கம்பெனிக்கு சக்தியில்லை; டைரக்டர்கள் கடந்த மூன்று வருடகாலமாக வேலைபார்த்துவந்ததற்காகவும் கம்பேனி யாதொருபணமும்கொடுக்கவில்லை. முந்தியபாத்திதை உடை பங்குதார்களுக்கு கம்பெனி 1906 மே மாதம் 31-ந்தேதி முதல் யாதொரு டிவிடெண்டும் கொடுக்கவில்லை. சாதாரண பங்குதார்களுக்கு கொடுக்கும்படியாக டிவிடெண்டே கூறப்படவில்லை. எதிர்பார்க்க படாத செலவுகள் நேரிட்டால் அவைகளைச் சந்திக்க யாதொரு ரிசர்வ் பண்டு பிரத்தியேகமாக வைக்க கடந்த 6-வருட காலமாக கம்பெனி சக்தியற்றதாயிருக்கிறது. கம்பெனிக்குள்ள ஸ்தாபர சங்கம சொத்துககளை எல்லாம் அடைமானம் வைத்து பணம்வாங்கி வேலையை நடத்த கம்பெனி ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

இந்த சமயத்தில், இந்தமனு இந்திய கம்பெனி ஆக்ட் எந்தப் பிரிவின்படி செய்துகொள்ளப்பட்டிருக்கிறதோ அதை வாசித்துக் காண்

தம்முடைய கக்ஷிக்கு ஆதாரமாக உள்ள புகளையும் பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மெண்டு ர்ட்டாருக்கு எடுத்துக் காண்பித்தார்.)

பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மெண்டு இன்னும் பேசினதாவது:—"எதிர் மனுதார்கள் தங்களுடைய எதிர்மனுவில் மனுதார்கள் இம்மனுவை விரோதத்தின்பேரிலும் செய்துகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலுக்காவது வட்டிக்காவது ஒரு தம்பிடி அளவேனும் என்னுடைய கக்ஷிக்காரருக்கு கம்பெனி கொடுக்கவில்லை. இன்னும் ஏன் யாதொன்றும் கொடுக்கவில்லை என்பதற்கு எதிர் மனுவில் யாதொரு காரணமும் சொல்லப்படவில்லை. மேலும் இந்த மனு சென்ற மாத ஆரம்பத்திலேயே செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. எதிர் மனுவில் சொல்லப்பட்டிருப்பதுபோல கம்பெனி நல்லஸ்திதியிலிருந்தால் இன்னும் ஏன் மனுதாருடைய கடன் தீர்க்கப்படவில்லை. மெசர்ஸ் குசால் தாஸ் அண்டு சன்ஸ் 8-லக்ஷரூபாய் கம்பெனிக்கு 28-9-1913-ல் கொடுக்கப்போகிறதாக பிரஸ்தாபமாக யிருந்தது. அந்த யோஜனை ரத்தாய் விட்டது. ஆகையால் இண்டஸ்டிரியல் கம்பெனி அதனுடைய கடனைத்தீர்க்க சக்தியற்றதா யிருக்கிறதென்று நான் நிச்சயமாய்ச் சொல்லக்கூடும். சொத்துக்களுமில்லை-கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவரும்படி கோர்ட்டார் உத்திரவு செய்வதால் மற்ற கடன்காரர்களும் கஷ்டப்பட மாட்டார்கள். நான் எடுத்துக்கூறியிருக்கும் தீர்ப்புகள் எல்லாம் கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவரும்படியான உத்திரவு எனக்கு கொடுக்கப்பட வேண்டுமென்பதை ஆதரிக்கிறது. மனுதார்கள் எதிர்மனுதாருக்கு 21-நாள் வாயுதாகொடுத்து ஜூலை 25 தேதி பணம் கொடுத்துவிட வேண்டுமென்று எழுதியிருந்தால் அந்தத் தேதியில் எதிர் மனுதார்கள் பணம் கொடுக்காமற் போகவே ஆகஸ்டு 25உ பிரஸ்தாப மனு தாக்கல்செய்யப்பட்டது-பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிற தென்றால் ஒரு கம்பெனிக்குச் சொத்திருந்து கடனைத் தீர்க்க சக்தியற்றதாயிருந்தால், வியாபாரம் சம்பந்தப்பட்ட வரையில் அது இன்சால்வெண்டா யிருப்பதாக எண்ணப்படவேண்டும். இங்கிலீஷ் ஆக்ட் 130-வது பிரிவு அதேகொள்கையை உடைத்தாயிருக்கிறது. (இந்த சமயத்திலும் தம்முடைய கக்ஷிக்கு ஆதாரமாக இன்னும் சில தீர்ப்புகளை எடுத்துக் காண்பித்தார்.) கோர்ட்டார். இப்போது யோஜனை செய்யவேண்டிய தென்னவென்றால் தற்கால கடன்களை தீர்க்கப் போதுமான சொத்து கம்பெனிக்கிருக்கிறதா என்பதே! இந்த அம்சத்தை ருசுப்படுத்த போதுமான சாக்ஷியம் காண்பிக்கத் தயாராயிருக்கிறேன். (இந்த விஷயமாக கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் அனேக கடிதங்களையும் பிரமாணப் பத்திரங்களையும் கோர்ட்டாருக்கு வாசித்துக் காண்பித்தார்.) இந்த மனுதாக்கலான 18-நாட்களுக்குப் பிறகு எதிர் மனுதார்கள் மிஸ்டர் குசால் தாசுடன் பணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். என்னுடைய கக்ஷிக்காரர் டிபன்ச்சர்கள் எடுத்துக்கொள்ள சம்மதிக்கவில்லை. தங்களுடைய பணத்தைக் கேட்கிறார்கள். கடந்த மூன்று வருஷங்களாக கம்பெனி மிக நஷ்டம் அடைந்து வந்திருக்கிறது. 61 ஆயிரச் சொச்சம் ரூபாய் நஷ்ட மடைந்திருக்கிறது, இந்த சமாசாரம் எதிர் மனுவில் ஆக்ஷேபிக்கப்படவில்லை.

கோர்ட்டார்:—மிஸ்டர் ரிச்மெண்டு! இந்த கம்பெனி கடனைத்தீர்க்க சக்தியற்றதாயிருக்கிறதென்று நீர் பங்குதாரி தரப்பில் சொல்லவில்லையே?

மிஸ்டர் ரிச்மெண்டு இந்த சமயத்தில் கம்பெனியின் பாலன்ஸ் ஷீட் என்கிற கையிருப்புக் கணக்கை வரவழைத்து கோர்ட்டாரிடம் கொடுத்தார்.

மிஸ்டர் ரிச்மெண்டு சொன்னபதில்:—கடனைத்தீர்க்க ஒரு கம்பெனி சக்தியற்றதாயிருந்தால் அது வியாபாரம் சம்பந்தப்பட்டவரையில், இன்சால் மெண்டாகயிருப்பதாக எண்ணப்படவேண்டுமென்பது சட்டம். என்னுடைய கக்ஷிக்காரர் கடன்காரராகவிருக்கும் நிலைமையில் இந்தமனுவைச் சேய்து கொண்டிருக்கிறார்.

பாலன்ஸ் ஷீட்கள் வாசிக்கப்பட்டன. அவற்றில் அடியிற்கண்டபடி காணப்பட்டிருந்தன:—1910ல் நஷ்டம் ரூ. 62,497; 1911ல் நஷ்டம் ரூ.19,330. 1912 ல் லாபம் ரூ.51800. 1912ல் சிப்பந்திச் செலவுகளும் வேலைசெய்த செலவுகளும் லக்ஷத்து சொச்ச ரூபாயாகிறது.

மிஸ்டர் ரிச்மெண்டு இன்னும், சொன்னதாவது:—1912-ல் காட்டியிருக்கும் லாபம் ஒரு லாபமாக எண்ணப்படமுடியாது ஏன் என்றால் வேலை செய்யும் செலவுகளோ அதிகமாயிருக்கிறது.

கம்பேனிக்கு 6 டைரக்டர்களிருக்கிறார்கள். டைரக்டர் போர்டிற்கு மிஸ்டர் ஹாஜி இஸ்மேல்சேட் சேர்மனாயிருக்கிறார். இவர் தம்முடைய பணத்தை இந்த முயற்சியில் போடுகிறதில்லை. தன் இஷ்டப்படி கம்பெனியை நடத்தி வருகிறார். அதனால் பங்குதார்களுக்கு அதிக நஷ்டம் உண்டாகி வருகிறது என்று சொல்லி முடித்தார்.

கோர்ட்டார்:—மிஸ்டர் ஆடம்! நீர் என்ன சொல்லுகிறீர்.

மிஸ்டர் ஆடம்:—கம்பெனியை முடிவுக்குக் கொண்டு வரவேண்டு மென்பதை ஆதரித்துப் பேசுகின்றேன்.

மிஸ்டர் நார்ட்டன் பேசினது:—இந்தக் கம்பெனி உள்நாட்டுக் கைத்தொழிலைச்சேர்ந்தது. அது எனக்கு பெருமையாயிருக்கிறது. இந்த தொழிற்சாலை கம்பெனி வெற்றிபெற வேண்டுமென்பது எல்லோருடைய விருப்... எதிர்கக்ஷிக்காரர்களோ எல்லாப் பா... தாங்களே வாங்கிக்கொண்டு கம்... அபாயமான பாகங்களை நீக்கிப்போட்டு ...னியையே தங்களுடைய சொந்தமானத... செய்துகொள்ளவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

1908 முதல் கம்பேனிக்கு 8 லக்ஷ ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. ஆகையால் இந்தக் கம்பேனி நிர்வகிக்கப்படவேண்டு மென்று நன்கு விளங்குகின்றது. ஹாஜி இஸ்மால்செட் அண்டு சன்ஸ் 16-ல் 9 பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், மனுதார்கள் 19-ல் 9 பங்குகள்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மையான காரணங்களை முன்னிட்டு இந்த மனு செய்துகொள்ளப்பட வில்லை என்றும் சுயப்பிரயோஜனத்தை நாடி இம்மனு செய்துகொள்ளப்பட்டிருக்கிறதென்றும் நினைப்பதற்குக்காரணங்களிருக்கின்றன. ஆயினும் இந்த மனு பைசல் செய்யப்படுவதற்கு மூன்று மாதம் வாய்தா தள்ளி வைக்கப்பட்டால் நலமாயிருக்குமென்று நம்புகின்றேன். அதற்குள்ளாக மனுதார்கள் பணம் சேகரித்து மனுதாருடைய கடனைத் தீர்த்துவிட்டு இந்த கம்பேனி நடக்கும்படியாக செய்வார்கள். மனுதார்கள் இந்த மனுவை தாக்கல் செய்ததை முன்னிட்டு இந்த சமயம் முன் வந்து கம்பேனிக்கு மூலதனம் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட மிஸ்டர் குசால்தாஸ் மறுபடியும் வராவிடில் எதிர் மனுதார்கள் பம்பாய்க்குப்போய் அவசியமான தொகை சேகரித்துக்கொண்டு வருவார்கள் என்றுசொன்னார்.

கோர்ட்டார் உத்திரவு:—ஒரு லிமிட்டெட் கம்பேனி அதனுடைய கடன்களைத் தீர்க்க சக்தியற்றதா யிருக்கிற தென்கிற காரணத்தை முன்னிட்டு அதை முடிவுக்குக் கொண்டுவந்து விடவேண்டு மென்கிற கருத்தைக்கொண்டு இந்த மனு செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

மூன்று பேர்களும் கம்பேனியின் ...ாகள். மனுவை ஆக்ஷேபிக்கிற மூன்று ...நம் டைரக்டர்களே. இந்த டைரக்டர் ...ம்பேனியின் மூலதனத்திற்காக அடிக்கடி ...ம்பனிக்குக் கடன் கொடுத்து வந்தார்கள். இந்த வகைகளில் ரூ. $7\frac{1}{2}$ லக்ஷம் மனுதார்களுக்கும் மனுவை ஆக்ஷேபிக்கும் கடன்காரர்களுக்கு ரூ. $2\frac{1}{2}$ லக்ஷமும் கம்பேனி கடன் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. இந்தப் பண ஏற்பாடு வெகு காலமாக நடந்துவந்திருக்கிறது. ஆனால் பிரஸ்தாப வருஷத்தில் டைரக்டர்களுக்குள் சச்சரவுகள் உண்டாயிருக்கின்றன. உள்ளபடி டைரக்டர்கள் இரண்டு கக்ஷியாய்ப் பிரிந்திருக்கிறார்கள். மனுதார்கள் ஒரு கக்ஷி. எதிர் மனுதார்கள் மற்றொரு கக்ஷி. பிரஸ்தாப வருடத்தில் ஒரு கக்ஷியார் பங்குகளை வாங்கிக் கொள்ளுகிறதென்றும் அப்படி வாங்கினவர்கள் கம்பெனியைச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டுமென்கிற கருத்துடன் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. ஜூலை மீ வாக்கில் மனஸ்தாபம் முற்றிப்போய்விட்டது. மனுதார்கள் இந்தியன் கம்பேனி ஆக்ட் 129-வது பிரிவின்படி 3 வார டயம் கொடுத்து பணத்தைக் கேட்க எதிர் மனுதார்கள் கொடுக்காமல் போக மனுதார்கள் கோர்ட்டுநடவடிக்கை ஆரம்பித்து ஆகஸ்ட் மீ 2உ இந்த மனுவை தாக்கல் செய்தார்கள். இந்த மனு கொடுக்கப்படுவதற்கு முந்தியே பணம் சேகரித்து மனுதார்களுடைய கடனைத் தீர்த்துப்போட எதிர் மனுதார்கள் முயன்றிருக்கிறார்கள். இந்தப் பிரயத்தனங்கள் எல்லாம் பயன் பெறாமல் போய்விட்டன. இன்னும் அவர்கள் பிரயத்தனம் செய்தால் பணம் சேகரித்து விடுவார்கள் என்று எனக்குத் தோற்றுகிறது. பிரஸ்தாப கடன்கள் வியாபாரத்தில் உண்டான கடன்களல்லவென்றும் இடீரென்று கேட்கப்படக் கூடாதவும் தொழிலை நடத்துவதற்காக வாங்கப்பட்ட கடன்கள் என்று செவ்வையாகத் தெரிகிறது. மனுதார்கள் இப்போது கேட்பதெல்லாம் கூடிய என்னவென்றால சாதாரண கடன்களுக்கு வகை செய்யவேண்டுமென்று கேட்கவில்லை. எல்லாருடைய சம்மந்தத்துடன் வேலை நடத்துவதற்காக வாங்கப்பட்ட மூலதன கடனை கம்பேனி தீர்த்துப்போட வேண்டுமென்று கேட்கிறார்கள். கம்பெனியை முடிவுக்குக் கொண்டு வந்து விடும்படி உத்திரவு செய்தால் முழு கம்பேனியும் அழிந்துபோகுமென்று எதிர் மனுதார்கள் எண்ணுவதற்கு நியாய மிருக்கிறதென்று நான் நினைக்கிறேன். பாலன்ஸ்ஷீட்டுகளைக் கொண்டு 1910, 1911-ல் கம்பெனிக்கு நஷ்டம் வந்திருந்தபோதிலும் 1912-ல் சொற்ப லாபம் வந்திருக்கிறது. வியாபாரக் கடன்களுக்குமேல் ஐவேஜி யிருக்கின்றன. பாலன்ஸ்ஷீட்டில் கையிருப்புச் சரக்கு மொத்தம் 10 லக்ஷ ரூபாய் என்று காணப்பட்டிருக்கிறது. ஆகவே மூலதனக் கடன்களைத் தீர்க்க கம்பேனியிடம் போதுமான பணமிருக்கிறது. டயம் கொடுத்தால் தீர்த்துப்போடுமென்று எண்ணுகிறேன். நடமுதல் கடன்களை கம்பேனி தீர்த்து வரக்கூடிய நிலைமையிலிருக்கிறது. இத்தியாதி காரணங்களை முன்னிட்டு மனுதார்களுடைய கடன்களை தீர்த்துப் போடுவதற்காகக் கம்பேனிக்கு கொஞ்சம் காலம் கொடுத்து வரவேண்டியது நியாயமா யிருக்கிறது. ஆகையால் இந்த மனுவின் விசாரணையை இன்றையிலிருந்து இரண்டு மாதம் தள்ளி வைக்கின்றேன். அப்போது மனுதார்களுடைய கடன்களை தீர்ப்பதற்கு செய்திருக்கும் ஏற்பாடுகளையும் எந்த ஏற்பாட்டிற்காவது கோட்டாருடைய சாங்கிஷன் வேண்டுமா என்றும் இன்னும் வாய்தா தள்ளி வைக்கப்பட வேண்டுமா என்றும் கம்பேனி தெரிவித்துக்கொள்ளலாம். செலவு தொகை மனு பைசல் செய்யப்படுவதைப் பொருத்தது. மனுவின் விசாரணை டிசம்பர் மீ 22உ தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. (1-10-1913)

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்.

மிஸடர் ஜஸ்டிஸ் ஓல்ட்பில்ட்

Insolvency of Inayatulla Sahib.

இனயதுல்லா சாகேப் இன்சால்வென்சி.

—:(*):—

மனுவின் விபரம்:—இனயதுல்லா சாகேப் இன்சால்வென்சி நடவடிக்கையில் அந்த சாயபூக்கு ஜஸ்டிஸ் மிஸ்டர் பேக்வெல் 6 மாதம் ஜெயில் தண்டனை விதித்தார். இந்த உத்தரவிற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் அப்பீல் முடியும் பரியந்தம் சாகேப்பை ஜாமீன்பேரில் விடவேண்டுமென்று அவர் தரப்பில் பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாஸ் மனு செய்துகொண்டார்.

லாயர்கள்:—அபிஷியல் அசயினி தரப்பிற்கு சொலிசிட்டர்களாகிய மெஸர்ஸ் ஷார்ட் அண்டு பியூஸ் என்பவர்களுடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் கவுடல் ஆஜரானார்கள்.

இந்த அப்பீலில் அடியிற்கண்ட விஷயங்கள் ஆலோசனை செய்யப்பட்டன.—ஜெயில் தண்டனைக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள பாத்திய மிருக்கிறதா.

(2) தண்டனையை நிறுத்திவைக்கும்படி உத்திரவு செய்ய கோர்ட்டாருக்கு அதிகார மிருக்கிறதா?

(3) அப்பீல் தாரை ஜாமீனில் விடுவதற்கு கோர்ட்டார் இஷ்டப்பட்ட ஒழுங்கான நிர்பந்தனைகள் விதிக்கலாமா?

உத்திரவு:—கோர்ட்டார் இந்த மூன்று அம்சங்களையும் பூராய் ஆராய்ந்துபார்த்து ரிஜிஸ்டிராருக்குச் சம்மதப்பட்ட இரண்டு ஜாமீன்கள் ஜாமீன் ஒன்றுக்கு ரூ. 2500 வீதம் கொடுத்துவிட்டு அப்பீல்தார் ஜெயிலிலிருந்து வெளிவரலாம் என்று உத்திரவு செய்திரு (14-10-1913)

குறிப்பு:—இந்தக் கேஸில் ஷை சாஹனுடைய கம்பெனியைச் சேர்ந்த சொத்துகளில் 17-ஆயிரம் ரூபாய் பொருமான சொத்துக்களை அவர் மறைத்துவைத்து கடன்காரர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கவேண்டிய பணத்தை குறைத்துவிட்டார் என்று குற்றம் ருஜூப்படுத்தி 8-மாதம் தண்டனை விதிக்கப்பட்டது.

—(:o:)—

IN THE COURT OF SMALL CAUSES.

ஸ்மால் காஸ் கோர்ட்டில்

கேசின் விபரம்:—கான்பகதூரர் காதர் நவாஸ்கான்சாகேப் குடும்பத்திற்கு மிஸ் ஜான் என்கிற லேடி அப்பாத்தகிரி வைத்தியம் பார்த்த விஷயத்தில் தனக்கு ரூ 90 கிடைக்கவேண்டுமென்று ஸ்மால்காஸ் கோர்ட்டடில் வியாஜ்யம் கொண்டுவர சர் V.C.தேசிகாச்சாரியார்ரூ 10-க்கு டிக்கிரி கொடுத்தார்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக ஸ்மால் காஸ் கோர்ட்டு புல்பெஞ்சிற்கு அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

வக்கீல் மிஸ்டர் K. R. சுப்பிரமணிய சாஸ்திரியார் அப்பீல் வாதிக்கு வக்கீல்

புல் பெஞ்சார் நவம்பர் மீ 17 உ கேசை விசாரணை செய்வார்கள்.

பாலிஸ் கோர்ட்டு.

மாஜிஸ்டிரேட்:— மிஸ்டர் M. S. V. உஸ் சாகேப் பகதூர்.

INDIA BURMA TRADING COMPANY.

இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனி.

இந்தக்கேசின் விபரத்தைப் பற்றி "சென்னை வியாபாரியின்" முந்தியசஞ்சிகையில் எடுத்துச் சொல்லியிருப்பது நம் நேயர்களுக்கு ஞாபகமிருக்குமென்று நம்புகிறோம்.

மிஸ்டர் ஹரிபிரசாத்ராவ் சாக்ஷி விசாரணை செய்யப்பட்டார். அவருடைய வாக்கு மூலம் பின் வருமாறு:—நான் இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனிக்கு 1912 ஏப்பிரலில் ஏஜண்டாக நியமிக்கப்பட்டேன். குற்றவாளிதான் என்னைநியமித்தார். கடந்த ஏப்பிரலில் நான் ஒரு டிராவலிங் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டேன். பர்ஜஸ் என்னும் கம்பெனி ஐரோப்பிய அவுஸ் என்று எனக்கு குற்வாளி சொன்னார். இந்த கம்பெனிக்கு தலைமை ஆபீஸ் பம்பாயிலிருப்பதாகவும் ஷை கம்பெனி இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனிக்கு ரூ 1,50,000 கடன்கொடுத்திருப்பதாயும் குற்றவாளி எனக்குச் சொன்னார். பிரியாதியை எனக்குத் தெரியும். பிரியாதி கொடுத்த பணத்தை நான் வாங்கி குற்றவாளிக்கு அனுப்பினேன். பிரியாதி கொடுத்தப்பணம் இந்தியா பர்மா டிரேடிங்கம்பெனியின் சொந்தமாக எண்ணப்பட பிரியாதி சம்மதிக்க வில்லை. இது விஷயமாக பிரியாதிக்கும் குற்றவாளிக்கும் கடிதம் போக்கு வரத்துகள் நடந்தன. இவைகள் எல்லாம் எனக்குத் தெரியும். (13-10-1913) (கேஸ்விசாரணை செய்யப்பட்டு வருகிறது)

N. B. ஷை கேஸ் குண்டேர் கிருஷ்ணராவ் ஜில்லா ஏஜண்டுவேலைக்காக ரூ 6 ஆயிரம் கொடுத்து மோசம் செய்யப்பட்டதாக சொல்லப்படும் கேஸ்.

———:(‡)———

ஜட்ஜிகள்: சர். C. சங்கர நாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்.

A SON MURDERED BY FATHER.

தகப்பன் பிள்ளையைக் கொன்றான்.

——:(*):——

கேசின் விபரம்:—ஐ. வெங்கடேச அய்யர் என்பவரும் காஞ்சீபுரத்தில் ஜவுளி வியாபாரியாகவும் தர்மகர்த்தாவாகவு மிருக்கும் மிஸ்டர் திருக்காமி செட்டியாரும் நெருங்கின மித்திரர்களாக விருந்தார்கள். ஐ. வெங்கடேசய்யர் என்பவரும் ஐவேஜு உடையவர். இவர் சம பார்த்தனை சுயார்ஜிதம் என்று சொல்லப்படுகிறது. இவருடைய சகோதரர்கள் ஒருக்கால் சுயார்ஜ்ஜிதத்தில் பாகம் கேட்கக் கூடுமென்று அஞ்சி சில தஸ்தாவேஜிகளையும் பணத்தையும் நகைகளையும் செட்டியாரிடமும் அவருடைய சிநேகிதர்களிடமும் ஒப்புவித்ததாகச் சொல்லப்படுகிறது. சில காலம் சென்று வந்து செட்டியாரை ரூ 9 ஆயிரம் கொடுக்கும்படி கேட்டார். கொடுக்காவிடில் கோர்ட்டு நடவடிக்கை நடத்துவதாகவும் பயமுறுத்தினர். செட்டியார் தமக்கு யாதொரு சமாசாரமும் தெரியாதென்று சொல்லவே "உம்முடைய வீட்டிலேயே என்னுடைய குமாரனைக் கொன்றுவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

சிறிது நாள் சென்று பையன் செட்டியாருடைய தோட்டத்தில் கொலை செய்யப்பட்டு

பிரேதமாய்கிடந்தான். பையனை குற்றவாளி அகாலத்தில் செட்டியார் தோட்டத்திற்கு அழைத்துக் கொண்டு போனதற்கும் திரும்பி வந்ததற்கும் ருஜுவேற்பட செங்கற்பட்டு செஷன் கோர்ட்டார் மரணதண்டனை விதித்தார்கள்.

அப்பீலில் அசல் கோர்ட்டுத் தீர்மானமே உறுதி செய்யப்பட்டது. (9-10-1913)

INDIAN PATRIOT APPEAL.
இந்தியன் பேட்ரியட் அப்பீல்.

(:o:)

டாக்டர் நாயர் கொண்டுவந்த மானநஷ்ட தாவாவில் இந்தியன் பேட்ரியட் பத்திராதிபர் திவான் பகதூர் கருணாகர மேனனுக்கு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் ரூ 300 அபராதம் விதித்தாரல்லவா இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக ஷை எடிட்டர் அப்பீல் செய்துகொள்ள மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் கோர்ட்டார்கள் அப்பீல் மனுவை அங்கீகரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

LAW DINNER.
சட்ட விருந்து.

நிகழும் அக்டோபர்மீ 11உ சனிக்கிழமை அட்வோகேட் ஜெனரலுடைய யோஜனையின் பேரில் சென்னைஐக்கோர்ட்டிலுள்ளவக்கீல் சங்கத்தார் பீபல்ஸ்பார்க்கிலிருக்கும் மூர்பாவிலியனில் ஒரு பெரியவிருந்து நடத்தினார்கள். நீதி பரிபாலனம் செய்யும் ஜட்ஜிகளும் மாஜிஸ்டிரேட்டுகளும் அவர்கள் நீதி பரிபாலனம் செய்வதில் அவர்களுக்கு இன்றியமையாத துணையாகவிருக்கும் வக்கீல்களும் கலந்து வருடத்திற்கு ஒரு முறைவிருந்து சாப்பிடுவது இங்கிலாண்டு தேசத்தில் வழக்கமாம். அதுபோல வருஷத்திற்கு ஒரு முறை சென்னையிலும் ண்டுமென்று அட்வோகேட் ஜெனரல் கோப்ட் என்பவர் முயற்சியின்பேரில் டார்கள், அட்வோகேட்டுகள், வக்கீல் அட்டர்னிகள் ப்ளீடர்கள் எல்லோரும் சே ந்து நடத்தினார்கள். விருந்து தினம் மழையாயிருந்தபோதிலும் சுமார் 200-பேர்கள் வந்திருந்தார்கள். மதிராஸ் டைம்ஸ், மெயில், ஹிந்து, மதிராஸ் ஸ்டான்டர்ட், இந்தியன் பேட்ரியட் முதலிய பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். சாப்பாடானவுடன் அட்வோகேட் ஜெனரல் அக்கிராசனம் வகித்துக்கொண்டு மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தியாரும் சக்ரவர்த்தினியாரும் தேகசௌக்கியமாயிருக்கவேண்டுமென்று ஆசிகூற எல்லோரும் சேர்ந்து டோஸ்ட் சாப்பிட்டார்கள். அதன்பிறகு அட்வோகேட் மிஸ்டர் M.O. பார்த்தசாரதி அய்யங்காரும் சீப் ஜஸ்டிசும், பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மெண்டும் திவான் பகதூர் கிருஷ்ணனும் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லரும் இன்னும் சில கனவான்களும் பேசினார்கள். இந்த விருந்தில் ஒரு புதுமை என்னவென்றால் ஜாதி வித்தியாசம் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டது. மாமிச உணவு சாப்பிடாத ஹிந்துக்கள், முகமதியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் எல்லாரும் ஒரு மேஜையில் ஒருவருக்கொருவர் அருகாமையில் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். மாமிசபக்ஷணிகளாயிருந்த ஹிந்துக்கள் தனியே தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்து சாப்பிட்டார்கள். சைவச்சாப்பாடு சாப்பிடும் பிராமணர்கள் உள்பட எல்லா வகுப்பார்களும் 10 அடிக்கு அப்பால் போடப்பட்டிருந்த மேஜையில் சாப்பிட்டார்கள். ஆனால் அவர்களுக்கு பிராமண பரிசாரர்கள்தான் பரிமாறினார்கள். எப்படியிருந்தபோதிலும் எல்லா சாதியாரும் கலந்து ஒரே சமயத்தில் ஒரேவிடத்தில் பகிரங்கமாய் நெருங்கி வீற்றுக்கொண்டு சாப்பிட்

ான் முதல்முறை. அது ஆங்கிலப்
ம தேசத்தவர்களை மாற்றிக்கொண்டு
ற்கு ஒரு அடையாளமா யிருக்கிறது.
ானில் சுமார் 30—வருடங்களுக்கு முந்தி
படிச் சேர்ந்து சாப்பிட்டால் பிராமண வை
தீகர்கள் சாப்பிட்ட பிராமணன் ராமேஸ்வரம், காசி, போய் பிராயச்சித்தம் செய்துகொண்டு வரவேண்டுமென்று சொல்லுவார்கள்! நிற்க, மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர், மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வல், மிஸ்டர் ஜஸ்டிஸ் P. R. சுந்திரமய்யர் நீங்கலாக மற்றெல்லா ஜட்ஜிகளும் விருந்திற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

INDUSTRIES AND CO-OPERATION.

கைத்தொழில்களும் ஐக்கிய முயற்சியும்.

The Technical Institute Madura.

மதுரை கைத்தொழில் ஸ்தாபனம்.

:o:

மதுரையில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருந்த மதுரை கைத்தொழில் ஸ்தாபனத்தை புதுப்பித்து ஒழுங்கு படுத்துவது லோக்கல் கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையில் வெகுகாலமாக யிருந்துவந்து இப்போது அதுவிஷயமாக உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். கைத்தொழில் வகுப்புகளில்சேரும் பணக்காரர்களுக்கு மாதத்திற்கு 5 ரூபாய் சம்பளம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த சம்பளம் வருஷத்திற்கு ஒரு முறைமேனிக்காவது அல்லது மாதத்திற்கு ஒரு முறையாவது கொடுக்கப்பட வேண்டும். ஐரோப்பாவிலிருந்து ஒரு நெசவு நிபுணரை தருவிக்க வேண்டுமென்கிற யோஜனையைத் தள்ளிவைத்திருக்கிறார்கள். இப்போதிருக்கும் நெசவு போதகருக்கு நிச்சயமான சம்பளம் ஏற்படுத்தவும் இப்போது சாத்தியப்படாதென்று அபிப்பிராயப் படுகிறார்கள். சாயத்தொழிலை கற்பித்துக்கொடுக்க ஒரு வகுப்பு ஏற்படுத்த வேண்டுமென்பதை அங்கீகரித்துக் கொண்டிருக்கிறார்கள். கைத்தொழில் வகுப்பில் சேரும் மாணாக்கர்களுக்கு உபகாரப் பணமும், வாடகையின்றி வசித்துவர ஜாகையும் கொடுத்துவர ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இனமாகச் சாப்பாடுபோட இணங்கவில்லை. இந்த சாலையில் செய்யப்படும் சாமான்களை என்னசெய்கிறதென்கிற பிரஸ்னை அனுபோகத்தின்பேரில் தீர்மானிக்கப்பட வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள்.

பம்பாய் விக்டோரியா ஜூபிலி கைத்தொழில் ஸ்தாபனத்தின் 25-வது வருடபூர்த்திக் கொண்டாட்டம் கடந்த செப்டம்பர் மாதம் 5-ந்தேதி நடந்தேறினது. பம்பாய் கவர்னராகிய லார்ட் வெல்லிங்டன் சபாநாயகராயிருந்து மாணாக்கர்களுக்கு அற்புதமான புத்திமதிகளைச் சொன்னார். இப்புத்திமதிகளையும் ஐக்கிய முயற்சி சம்பந்தமான சில முக்கிய விஷயங்களையும் முன்னிட்டு பிரஸ்தாப சஞ்சிகையில் விடுத்துளோமாயினும் அடுத்த சஞ்சிகையிலும் வெளிவருவதைக் காண்க.

பா—ர்.

REVIEW OF BOOKS.

புத்தக ஆராய்ச்சி.

"ஸ்ரீகுமுதவல்லி திருமங்கைமன்னன்."

இது ஒரு தமிழ் நவீனகம் வெகு சிங்காரமாக எழுதப்பட்டிருக்கிறது. எழுதப்படிக்கத்

தெரியாத பாமரஜனங்களுக்குத் தெய்வத்தன்மைபொருந்திய இத்தேசபுராணேதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கும் கதைகளையும்நீதிகளையும் புகட்டுவதற்கே நாடகங்கள் ஆதியில் ஏற்பட்டிருக்கின்றன. அந்த நோக்கம் இப்போது பலிதப்படாமல் அதன் நேர் விரோதம் இப்போது பலிதப்பட்டு வருகிறதென்பதை எவரும் ஒப்புக்கொள்ள. தாமதியார். ஸ்ரீகுமுதவல்லி திருமங்கைமன்னன்போலொத்த பக்திரசம் நிரம்பப்பெற்ற நாடகம். நடத்திக் காண்பிக்கப்பட்டால் நாஸ்திகன்கூட ஆஸ்திகனுமாவான் என்பதில் தடை உண்டோ? இலகுவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலையும் சொற்பம். சரித்திரமும் பக்திஞான யோகங்களை கதைரூபமாக போதிக்கிறதாயிருக்கிறது. ஆதலால் ஸ்திரி புருஷாள் எல்லாரும் இதை விரும்பி வாசிக்கலாம். இந்த நாவலை எழுதும்படியான பாக்யத்தைப் பெற்றிருப்பவர் திருநாகை வித்வான் என்று சொல்லப்படும் ம-ா-ா-ஸ்ரீ, அமிர்தகவி J. ஜெகநாதபிள்ளை அவர்கள். புத்தகத்தின் விலை எட்டணா. வேண்டியவர்கள் நாகப்பட்டணம் பெருமாள் கோவில் வடக்கு மடவளாகம் வெங்கட்டராம செட்டியாருக்கு எழுதிக்கொள்ளலாம்.

"பெண் கல்வி."

இது ஒரு மாதாந்தப்பத்திரிகை. இதன் பத்திராதிபர் சகோதரி ரேவுதாயாரம்மாள். வருஷசந்தா ரூபா 2-8-0. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக ஸ்வாமிகள்போலொத்த பெருமான்களும் சில பெருமாட்டிகளும் இப்பத்திரிகைக்கு போஷகர்களாயிருக்கிறார்கள். ஸ்ரீமதி சகோதரிரேவு தாயாரம்மாள் பத்திராதிபராயிருப்பதுடன் மகா விலைஉயர்த நவரத்னங்களுக்கும் மேலான கல்வி ரத்தினத்தை அணிந்துகொண் டிருக்கும்படியான அனேக ஸ்ரீரத்தினங்களும் விஷயங்கள் எழுதி வருகின்றார்கள். ஸ்ரீமான் கே. கே. சீனிவாசாச் சாரியர் எம்-ஏ. எம்-எல். போல் கல்விக்கடலில் வெகுதூரம் நீந்து கனவான்களும் அரிய பெரிய விஷயங்களை திவருகின்றார்கள். உதாரணமாக நம்முபார்வைக்கு வந்திருக்கும் செப்டம்பர் மா, சஞ்சிகையில் (1) ராஜரீக வாழ்த்து. (2) பிடபஞ்சப்போக்கு—இந்திய ஸ்திரீகளும் தேகப்பயிற்சியும், இந்திய ஸ்திரீகளுக்கு வைத்திய உதவி, இல்லக்கல்வி. (3) இந்து ஸ்திரீ இரத்தினங்கள் நூர்ஜஹான். (4) ஜாதி. (5) பால்ய விவாஹமும் பெண் கல்வியும். (6) கல்வியின் பெருமை. (7) குடும்ப தருமங்கள். (8) மாலதி (9) பலவகைச் சமாசாரங்கள்.

ஆகிய இந்த விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகை எல்லோராலும் ஆதரிக்கப்பட வேண்டியதென்று நாம் எடுத்துச் சொல்லாமலே விளங்கும்!

"ஸீ கஸ்டம்ஸ் சட்ட ஒழுங்குகள்."

இந்த ஒழுங்குகளும் சட்டங்களும் ஏற்கனவே ஆங்கில பாஷையில் புஸ்தக ரூபமாகவும் போர்ட்செண்ட்ஜியார்ஜ்கெஜெட்டிலும்பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவே யொழிய இந்த ஒழுங்குகளை எல்லாம் திரட்டி புத்தகரூபமாகதமிழிலில் அச்சடித்து வெளிப்படுத்தின தில்லை. சமுத்திர சம்பந்தமான வியாபாரம் செய்யும் ஆங்கில மறியாத தமிழ் வியாபாரிகளுக்கு மிகவும் அவசியமானதென்று எண்ணுகின்றோம். கூடலூர் கஸ்டம்ஸ் கலெக்டர் மிஸ்டர் B. ஆபிரகாம் அவர்கள் மிக சிரமத்துடன் ஒன்று தப்பாமல் எல்லா ஒழுங்குகளையும் திரட்டிச்சேர்த்து புத்தகரூபமாக வெளியிட்டிருக்கின்றனர். ஏழை வியாபாரிகளும் இதை வாங்கி உபயோகித்துக் கொள்ளும்படியாக 110-பக்கங்கள் மிக உபயோகமான சமாசாரங்களை அடக்கிக்கொண்டிருக்கும் இப்புத்தகத்திற்கு 12-அணாதான் விலை வைத்திருக்கின்றனர்.